# தீபகச் சுடர்

ஏப்ரல் 2026

தீபம் 14 சுடர் 11

TO SHARE THE LIGHT

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## தீபகத்திலிருந்து **இறையாசீர்**



அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,

# "நம்பிக்கை உயிர்த்தது" இயேசு கிறிஸ்துவே இன்றைய உலகிற்கான ஒளி!

"உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்?
அவர் இங்கே இல்லை, அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" (லூக். 24:5)

**கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்! அல்லேலூயா!**

அநீதி, பயம் மற்றும் துன்பங்களால் காயமடைந்த உலகில், கிறிஸ்து உயிர்த்தெழுந்த செய்தி இன்று புதிய வலிமையுடன் ஒலிக்கிறது:

"கிறிஸ்து நம் நம்பிக்கையாக உயிர்த்தெழுந்தார்!"

இச்செய்தி இன்று இந்தியாவிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலும் மிகவும் பொருத்தமானது. ஏழைகள், புறக்கணிக்கப்பட்டவர்கள், சிறுபான்மையினர், இவர்கள் மனித மரியாதைக்காக இன்னும் போராடுகின்றனர். சாதி, மத வேறுபாடுகள் காரணமாக அவர்கள் அநீதியையும் வறுமையையும் சுமந்து வருகிறார்கள்.

இளைஞர்கள் நம்பிக்கையை இழந்து வருகின்றனர். வேலைவாய்ப்பு குறைவு, சமூக கலக்கம், போதைப்பொருள் மற்றும் வன்முறை, உலகளாவிய போர்களின் தாக்கம், இவை அவர்களின் எதிர்காலத்தை குழப்புகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் இந்த சூழலில் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள்.

ஆனால் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை ஒரு விழாவாக மட்டும் அல்ல........அது ஒரு வாழும் நம்பிக்கை.

இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு சொல்லுவது:

அன்பு வெறுப்பை வெல்லும்.
உண்மை பொய்யை வெல்லும்.
உயிர்ப்பு மரணத்தை வெல்லும்.

கிறிஸ்துவில் உயிர்த்த நம்பிக்கை என்பது ஒரு ஓடை........அது ஓரிடத்தில் நிற்பது அல்ல, அது ஓடிக்கொண்டே இருக்கும், பல மாற்றத்தை உருவாக்கும் சக்தி.

“நம்பிக்கை ஏமாற்றாது” (உரோ 5:5)

கிறிஸ்து ஏழைகளுடன் இருக்கிறார். கிறிஸ்து ஒடுக்கப்பட்டவர்களுடன் நிற்கிறார்.

இளைஞர்களை நம்பிக்கையின் பயணிகளாக அழைக்கிறார்.

மரியாதையை காக்கவும், அமைதியை உருவாக்கவும், உடைந்த இதயங்களுக்கு நம்பிக்கையைத் தரவும், இருள் நிறைந்த இக்காலத்தில், நாம் ஒளியாக இருக்க அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்து, கல்லறையில் மட்டும் அல்ல, ஒவ்வொரு நீதியிலும், அன்பிலும், தைரியத்திலும் உயிர்த்தெழுந்தார்! நாமும் அவருடன் உயிர்த்தெழுவோம்.



என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 02.04.2026 | திருப்பாடுகளின் பெரிய வியாழன் - திருப்பலி | 06 |
| 03.04.2026 | ஆண்டவரின் பாடுகளின் வெள்ளி | 07 |
| 04.04.2026 | திருச்சிலுவை ஆராதனை | 08 |
| 05.04.2026 | ஆண்டவரின் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு - திருப்பலி | 09 |
| 11.04.2026 | புனித ஸ்தனிஸ்லாஸ் - திருப்பலி | 11 |
| 12.04.2026 | இறை இரக்கத்தின் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 19.04.2026 | பாஸ்கா காலத்தின் 3ம் ஞாயிறு - திருப்பலி | 13 |
| 21.04.2026 | புனித ஆன்சல்ம் ஆயர் - திருப்பலி | 15 |
| 23.04.2026 | புனிதர்கள் ஜார்ஜ், அடால்பெர்ட் - திருப்பலி | 16 |
| 24.04.2026 | சிக்மரிங்கன் நகர்ப் பிதேலிஸ் மறைசாட்சி - திருப்பலி | 17 |
| 25.04.2026 | புனித மாற்கு நற்செய்தியாளர் விழா - திருப்பலி | 18 |
| 26.04.2026 | இறையழைத்தல் ஞாயிறு - திருப்பலி | 20 |
| 28.04.2026 | மான்போர்ட் நகர்ப் புனித லூயிஸ் மரிய கிரிஞ்ஞோன் - திருப்பலி | 21 |
| 29.04.2026 | சியென்னா நகர்ப் புனித கத்ரீன் - திருப்பலி | 22 |
| 30.04.2026 | புனித ஐந்தாம் பயஸ் - திருப்பலி | 24 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| வாழ்வை மாற்றும் புனித வாரம் | 26 |
| உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம் | 32 |
| புனித மாற்கு நற்செய்தியில் இயேசுவின் சுவடுகள் | 34 |
| விடுமுறை விவிலியப் பள்ளி (VBS): சில ஆலோசனைகள் | 38 |
| திருஅவைச் செய்திகள் | 41 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# திருப்பாடுகளின் பெரிய வியாழன்

திருப்பலி
02.04.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

**பாஸ்கா முப்பெரும் புனித நாட்களின் தொடக்கம்** (Easter Triduum)

அன்பர்களே, புனித வாரத்தின் மிக முக்கிய நாளான பெரிய வியாழன் திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். பாஸ்கா முப்பெரும் நாட்கள் என்பது பெரிய வியாழன் மாலையில் தொடங்கி (புனித வெள்ளி, திருவிழிப்பு), உயிர்ப்பு ஞாயிறு மாலை வரை உள்ள மூன்று நாட்களைக் குறிக்கும். இயேசுவின் பாடுகள், இறப்பு, அடக்கம், மற்றும் உயிர்ப்பினை நாம் இந்நாட்களில் நினைவு கூருகிறோம். இன்று ஆண்டவர் இயேசு, பாஸ்கா இறுதி உணவை உண்டு, தன் சீடர்களின் பாதங்களைக் கழுவி, தாழ்ச்சியின் முன்மாதிரியைத் தந்தார். அதோடு, நற்கருணை எனும் அருளடையாளத்தை நிறுவி, குருத்துவத்தையும் ஏற்படுத்தினார். இன்றைய திருவழிபாடானது, (1) வார்த்தை வழிபாடு, (2) பாதம் கழுவும் சடங்கு, (3) நற்கருணை வழிபாடு மற்றும் (4) நற்கருணை இடமாற்றப் பவனி என நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. கத்தோலிக்கத் திருஅவை தனது வாழ்வின் மையமாக நற்கருணையைக் கொண்டுள்ளது. நற்கருணையே கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், உச்சமுமாக அமைகிறது. நற்கருணை உணவு, பலி, உடனிருப்பு, பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம் (மாற்கு 14:24) என்ற இயேசுவின் வார்த்தைகள், அவரே தம் உடலை வாழ்வு தரும் பலிப்பொருளாகக் கருதினார் என்பதை உறுதி செய்கின்றன. இயேசுவின் உடனிருப்பு நற்கருணை வழியாகத் தொடர்வதை உணர்ந்தவர்களாய் அவரோடு என்றும் ஒன்றித்து வாழ இத்திருநிகழ்வில் பக்தியோடு பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. **திருஅவைக்காக:** எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும், பணிவும் தியாகமும் கொண்டு வழிநடத்தவும், நற்கருணை பக்தி மக்களிடையே வளரவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. **பணியாளரின் அன்பிற்காக:** இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவியது போல, நாங்களும் ஒருவருக்கொருவர் பணிவிடை செய்யவும், பகை மறந்து அன்புடன் வாழவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **நற்கருணை பக்தி:** நற்கருணையில் நிலைத்திருக்கும் இயேசுவை, நாங்கள் நம்பிக்கையுடன் ஏற்று, எமது தினசரி வாழ்வில் நற்கருணை வாழ்வு வாழ அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. **சமூக ஒற்றுமை:** பல்வேறு கலவரங்கள், போர்கள், பிரிவினைகள் நீங்கி, அனைவரும் ஒரே குடும்பமாக, இயேசுவின் அன்பில் பிணைந்து வாழ அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# ஆண்டவரின் பாடுகளின் வெள்ளி

திருப்பாடுகள்
03.04.2026

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

**"இதை என் நினைவாகச் செய்யுங்கள்"**

இறையேசுவின் அன்புச் சகோதரனே, சகோதரியே, இன்று புனித வார வழிபாட்டில் மூன்று முக்கியமான நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுகின்றன. அவைகள், இறையன்பை பிறருக்கு பகிர்ந்தளிக்கும் குருத்துவம், அன்பிற்கு இலக்கணமான நற்கருணை, மற்றும் புதிய கட்டளையான அன்புக்கட்டளை ஆகியவற்றை ஏற்படுத்தியது இந்நாளில்தான். இன்றைய திருப்பலியைச் சிறப்பான முறையில் குருக்களுக்காகவும் நம்மை ஏற்றுக்கொள்ளாதவர்கள், கஷ்டப்படுத்தியவர்களுக்காகவும் செபிப்போம். நமக்காக தன் உடலையே பிட்டுக்கொடுத்து, நற்கருணையில் குடிகொண்டிருக்கும் இயேசுவுக்கு ஆராதனையும், வணக்கமும், மரியாதையும் செலுத்துவோம். அவ்வாறே நம்மை பெற்றெடுத்த தாய் தந்தையருக்காகவும், மன்றாடுவோம். அவர்களை வயது முதிர்வின் காரணமாக ஏற்றுக்கொள்ள மனமில்லாமல், தன்னுடைய சுயநலத்துக்காக, கௌரவத்திற்காக நாம் அவர்களை வெறுத்து, ஒதுக்கிய தருணங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டு, நாம் பெற்றோர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையையும், செலுத்த வேண்டிய அன்பையும் பகிர்ந்து வாழ்ந்தால் இயேசு நம்மையும் நண்பர்களே என்று அழைப்பார். எனவே நாமும் புதிய கட்டளையாம் அன்புக் கட்டளையை பின்பற்ற அனைவரையும் நண்பர்களாக ஏற்றுக்கொண்டு வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தலைமை குருவான இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்களின் அருட்சாதனங்களை திருஅவையின் மக்களுக்கு நிறைவேற்றி, அனைவரையும் இறைவனிடம் கொண்டு செல்லும் ஆன்மீக பணியை செய்தவற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். இறைவா, நீர் உமது பணிக்காக தெரிந்து கொண்ட இவர்கள் அனைவருக்கும் நல்ல உடல், உள்ள சுகம் பெற்று இறுதிவரை தங்களின் துறவற நிலையில் நிலைத்திருந்து உமக்கு சாட்சி பகர்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்கருணை நாதரே எம் இறைவா, மனிதர்கள் மேலுள்ள அளவற்ற அன்பினால் உமது மகன் இயேசு கிறிஸ்துவின் உடலையும், இரத்தத்தையும் அப்ப வடிவிலே தந்து, என்றும் எங்களோடிருந்து ஆன்ம சரீர, சக்தியை தந்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் இயேசுவின் உடலை நற்கருணையாக உண்ணும்போது நம்பிக்கையோடும்,

பாவமற்ற நிலையிலும் உட்கொள்ளும் மனநிலையை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பே உருவான இறைவா, இன்றைய நாளின் முக்கிய நினைவாக அன்பு கட்டளையை தந்து கிறிஸ்துவ வாழ்வின் அடிப்படையான அன்பின் தன்மையை தன் வாழ்வின் இறுதிவரை வாழ்ந்து காட்டிய உம் திருமகன் இயேசுவைப்போல் வாழும் வரத்தை தரவும், பகைவர்களையும், துன்பப்படுபவர்களையும் மன்னித்து அன்பு செய்து வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



## திருச்சிலுவை ஆராதனை

திருப்பலி
04.04.2026

### முன்னுரை

*திரு. விக்டர்*

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நாம் தவக்காலத்தின் இறுதிநாளில் இருக்கின்றோம். இந்த தவ நாட்களில் நாம் மேற்கொண்ட பல தவமுயற்சிகள் நிறைவடையும் நாள். இந்த 40 நாட்களும் அசைவம் தவிர்த்தவர்கள் உண்டு. இந்த தவ நாட்களில் மதுவை தள்ளினவர்களும் உண்டு. தினந்தோறும் திருப்பலியில் பங்கெடுத்து காவி உடை உடுத்தினவர்கள் உண்டு. அனுதினம் சிலுவைப் பாதையை தியானித்தவர்களும் உண்டு. இந்த வெளி அடையாளங்கள், தவ முயற்சிகள் எந்தளவுக்கு நமது தனிப்பட்ட வாழ்வில் ஆண்டவர் விரும்புகிற மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பதைத்தான் ஆண்டவர் ஆவலோடு எதிர் நோக்கியுள்ளார். "உங்கள் உடைகளையல்ல உள்ளங்களை கிழித்துக்கொள்ளுங்கள்" என்ற அழைப்போடு இந்த காலத்தை தொடங்கியது நினைவில் இருக்கிறதல்லவா?

**இன்று நாம் என்ன செய்யலாம்? சிந்திப்போம்.**

- நம்முடைய பாவங்கள்தானே இயேசுவை சிலுவையில் அறைந்தது என்று உணர்ந்தவர்களாய் "பாவத்தை வெறுக்கிறேன்" என்று ஆண்டவருக்கு வாக்கு கொடுப்போம்.

- இதுவரை யாரையாவது மன்னிக்கமுடியாமல் வெறுக்கிறவர்களாய் இருக்கிறோமென்றால் அவர்களை மனப்பூர்வமாய் மன்னிப்பதாக ஆண்டவருக்கு உறுதியளிப்போம்.

- நமது தனிப்பட்ட வாழ்வில் ஆண்டவரது திருவிவிலியத்தை வாசிக்காமலோ, தியானிக்காமலோ இருந்திருந்தோமென்றால், இனி தினந்தோறும் தவறாமல் வாசித்து, தியானிப்பதாக வாக்களிப்போம்.

- நம்மிடம் இருப்பதை தேவையில் இருப்போருக்கு பகிர்ந்தளித்து வாழ்வதாக ஆண்டவரிடம் சொல்வோம்.

- சாட்சிய வாழ்வு வாழ்ந்து நற்செயல் செய்தவன்மூலம் தந்தையை மகிமைப்படுத்துவேன் என்று ஆண்டவருக்கு வாக்களித்தவர்களாய் நற்செயல்களைச் செய்ய முற்படுபோம்.

பரிசுத்த ஆவியானவரின் துணையோடு நம்மையே நாம் உற்றுநோக்குவோம். உள்ளத்தின் ஆழத்தில் புதைந்துக்கிடக்கும் பகையை வெறுத்து, தயக்கமின்றி அவர்களை மன்னித்து, மலர்ந்த முகத்தோடு அவர்களை அன்பு செய்வேன் என்று ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்போம். அதற்கு அவரின் ஆசிவேண்டி இத்திருச்சிலுவை ஆராதனையில் பங்கெடுப்போம். இயேசுவின் இரக்கம் நமது எல்லா பாவங்களையும் விலக்கி நம்மை புனிதப்படுத்துவார் என்ற நம்பிக்கையோடு இவற்றில் பக்தியோடு பங்கெடுப்போம். இறைவனின் சாட்சிகளாய் வாழ்வோம்.



# ஆண்டவரின் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

திருப்பலி
05.04.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *திப. 10: 34, 37-43* II. *கொலோ. 3: 1-4* *யோவா. 20: 1-9*

"சாவு வீழ்ந்தது வெற்றிக் கிடைத்தது" இயேசு உயிர்த்தார் அல்லேலூயா என்னும் வெற்றிப்பாடல் நம் உள்ளங்களில் இன்று ஒலிக்கின்றது. அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு தின நல்வாழ்த்துக்கள். அன்பு அச்சத்தை வெல்கிறது, அன்பு சாவையும் வெல்கிறது. இயேசு தந்தையின்மீது கொண்ட அன்பினால் சாவின்மீது பயமில்லாமல் சாவை வென்றார். மகதலா மரியாவும் இயேசு தான் இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று கூறிய வாக்குறுதியை நம்பி பயம், இருள், சாவு, கல்லறை என்ற அச்சம் சிறிதும் இல்லாமல் அவர்மீது வைத்த நம்பிக்கையில் அவரைக் காணச் சென்றாள். கண்டாள், நம்பினாள், உயிர்ப்பு செய்தியை முதன் முதலில் தெரிந்துக்கொண்ட பெண்ணுமானாள்.

இயேசு தனது வாழ்நாளில் அனுபவித்த துன்பங்கள் அனைத்தும் நாம் செய்த பாவத்தின் பலன்கள். பிறரைப்பற்றி தவறாகப்பேசுவது, சிறிதளவு கூட பிறருக்கு உதவாத குணம், பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் சேர்ப்பது, தேவையற்ற தீயப் பழக்கங்கள், தீய நண்பர்கள் பெண்களுக்கு ஏற்படுத்தும் பாலியல் துன்பங்கள், தீவிரவாதம், கொலை, கொள்ளை போன்ற பல தீயசெயல்களை இயேசுவுக்கு எதிராக நாம் செய்கின்றபோதெல்லாம் இயேசுவை சிலுவையில் அறைகின்றோம். எல்லாவற்றையும் மன்னித்த இறைவன் நமக்காக உயிர்த்தார். சில நேரங்களில் நம்மால் முடியவில்லையே என்று சோர்ந்து போகிறோம். கடன்பிரச்சனை, வேலைக் கிடைக்காமை, திருமணம் தடைப்படுதல், வறுமை, நோய் போன்றவற்றால் பல தடைகள் வாழ்க்கையில் ஏற்படும்போது நாம் நினைக்க வேண்டியது உயிர்த்த இயேசுவையே. இயேசுவின் உயிர்த்தெழுதல் நாம் புத்துயிர் பெறுவதற்கு ஒரு முன்னோடியாக அமைகிறது. உயிர்த்த ஆண்டவர் நம் நம்பிக்கையின்

அடித்தளமாகவும் இருக்கிறார். கிறிஸ்துவின் வழியாக புத்துயிர் பெற்ற நாம் அதை அன்றாட வாழ்வில் வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்துவை நமக்கு மீட்பராக அளித்த கடவுளை அன்பு செய்து அடுத்திருப்போரையும் அதே அன்போடு நாம் அரவணைக்கும்போது உண்மையிலேயே நாம் புதுவாழ்வு பெறுவோம். இதுவே உயிர்ப்பு பெருவிழா நமக்குத் தரும் செய்தி. இறைவனையும் மனிதரையும் அன்பு செய்வோம் அச்சமின்றி வாழ்வோம், சாவை வெல்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உயிர்த்த எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்முடைய உயிர்ப்பின் சாட்சிகளாய் அச்சமின்றி நற்செய்தியைப் பறைசாற்றி நம்பிக்கையில் நிலைத்திருக்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் அரசரே எம் இறைவா, உலகில் பல பகுதிகளில் நடக்கும் போர்களினால் நாட்டில் அமைதியின்மை, பயம், பொருளாதார பற்றாக்குறை, விலைவாசி உயர்வு போன்ற பல பதட்டமான சூழ்நிலைகள் நிலவிவருகிறது. நீரே உம் உயிர்ப்பின் அமைதியை பொழிந்து மக்கள் சமாதானத்தோடும், ஒற்றுமையோடும் வாழ உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளைப் பெற்று வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. துன்பங்களை வென்றவரே எம் இறைவா, நோயாளிகள், ஏழைகள், கைவிடப்பட்டோர், முதியோர்கள் மற்றும் பலவிதமான துன்பங்களில், சிக்கல்களில் தவிப்போரை உமது பதம் சமர்ப்பிக்கின்றோம். நீரே இவர்களுக்கு உற்றத்துணையாக இருந்து துன்பங்களைத் துடைத்து வாழ்வில் மகிழ்வோடு உம்மை நோக்கி பின்தொடர தேவையான ஆற்றலை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

4. இறப்பை வென்றவரே, நம்பிக்கையாளர்களாகிய நாங்களும் எங்களின் வாழ்வில் ஏற்படுகின்ற சந்திக்கின்ற பிரச்சனைகளை பொறுமையோடு ஏற்று, அனைத்துவிதமான துன்பங்களையும் தைரியத்தோடு எதிர்க்கொண்டு உமது நம்பிக்கையின் கருவிகளாக நாங்கள் செயல்பட்டு உமது உயிர்ப்பில் நாங்களும் பங்குகொள்ள எங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித ஸ்தனிஸ்லாஸ்

திருப்பலி
11.04.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய தினம், ஸ்தனிஸ்லாஸ் என்னும் புனிதரைச் சிறப்பிக்க நாம் அனைவரும் ஒன்று கூடியுள்ளோம். புனித ஸ்தனிஸ்லாஸ் கி.பி. 1030ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் நாள் போலந்து நாட்டிலுள்ள (கிராக்கோ நகரில்) செப்பனோவ் என்னும் இடத்தில் ஞானம் நிறைந்த தம்பதியினருக்கு பிறந்தார். சிறுவயது முதலே நல்ல கல்வி பயின்று 7 ஆண்டுகள் பாரிஸில் கல்விக் கற்று குருவாகி பணிபுரிந்து வந்தார். அவரது போதிக்கும் திறமையைக் கண்ட "கிராக்கோ" நகரின் ஆயர் அவரை ஆன்மீக ஆலோசகராக நியமனம் செய்தார். பின் கி.பி. 1072ல் தூய ஸ்தனிஸ்லாஸ் "கிராக்கோ"வின் ஆயராக பதவி ஏற்றார்.

அக்கால கட்டத்தில் பாவச் செயல்கள் பல புரிந்த அந்நாட்டு மன்னனை தனியாக கண்டு அவரின் பாவச் செயல்களை வன்மையாக கண்டித்தார். அதன் பயனாக சிறிது காலம் மனம்மாறிய பின் திரும்பவும், அந்நாட்டின் நல்ல மனிதரான ஒருவரின் பேரழகியான மனைவியை கவர்ந்ததால் புனித ஸ்தனிஸ்லாஸ் அம்மன்னனை திருஅவையை விட்டு விலக்கினார். இதனால் சினங்கொண்ட அம்மன்னன் நமது புனிதர் இறைவார்த்தையை மக்களுக்கு போதிக்கும் வேளையில் ஆலயத்தில் நுழைந்து கொன்றான். கடவுளின் வார்த்தைகளை கூறிக் கொண்டே இரத்த சாட்சியாக இறந்தார். புனித ஸ்தனிஸ்லாஸ் இறந்த வருடம் கி.பி. 1079, ஏப்ரல் 11ம் நாள். அரசனாலும் தவறைச் சுட்டிக்காட்டி திருத்தும் நம் புனிதரை போன்று நாமும் பிறரின் தவறை எந்த தயக்கமுமின்றி தைரியத்துடன் எடுத்துரைக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொண்டு வாழ இத்திருப்பலியில் வேண்டி மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் கண்ணுக்கெதிராக பாவம் செய்யும் மனிதர்களை தட்டிக் கேட்கவும் அவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய கடமையையும் இவர்களுக்கு அளித்திருப்பதை உணர்ந்தவர்களாய் தங்களின் கடமைகளை தியாக உணர்வுடன் செயல்பட வேண்டிய மன உறுதியை அளித்து பாதுகாத்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. தயை மிகுந்த இறைவா, அழிவின் பாதையில் சென்றுக்கொண்டிருக்கும் இவ்வுலகை அழிவிலிருந்து மீட்கவும், மக்கள் அமைதியுடன் வாழவும், நாடுகளுக்கிடையே நடந்துக்கொண்டிருக்கும் போரினை நிறுத்தி தங்களுக்குள் ஒற்றுமையும், சமாதானமும் நிலவி, அமைதியான முறையில்

தங்களின் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்துக்கொள்ளும் தியாக உள்ளம் கொண்டவர்களாக மாற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, இயற்கையின் படைப்பில் மகிழ்ந்து வாழ்வில் நோய்நொடியின்றி வாழ்ந்த நாங்கள் அறிவியல் ஆராய்ச்சியினால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு, பலவிதமான இன்னலகளுக்கும் நோய்நொடிகளுக்கும் ஆளாகி தவித்துக்கொண்டிருக்கும் எங்களை உமது கருணையினால் எங்களையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# இறை இரக்கத்தின் ஞாயிறு

திருப்பலி
12.04.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *திப. 2: 42-47* II. *1பேதுரு 1: 3-9* *யோவா. 20: 19-31*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, நம்பிக்கை என்பது கண்ணுக்குப் புலப்படாதவற்றின்மீது நாம் கொள்ளும் ஐயமற்ற நிலை. கடினமான சூழ்நிலைகளிலும் அறிவுக்கு அப்பாற்பட்டு நல்லது நடக்குமென்ற மனஉறுதியாகும். இது மனித வாழ்க்கையை முன்னோக்கிச் செலுத்த பேராற்றலாக உள்ளது. எவ்வளவு கடினமான நிலையிலும் நம்மால் முடியும் என மனஉறுதியோடு நம்பும்போது அது வெற்றியின் படிகட்டுகளை அடைய உந்து சக்தியாக அமைகின்றது. இந்த உலகமே நம்பிக்கையினால் தான் சுழன்றுக்கொண்டிருக்கின்றது. நாம் பேசும்போதும், நம்பிக்கை என்றுதான் பேசுகிறோம். நாம் ஒருவர்மீது ஒருவர் கொள்ளும் நம்பிக்கையே முதலிடம் பெறுகின்றது. மனிதர்கள்மீதும் அசையும், அசையா சொத்துக்கள்மீதும் கொள்ளும் கண்மூடித்தனமான நம்பிக்கை பெருந்துயரை அளிக்கும். மாறாக அன்புள்ளம் கொண்ட இறைவன்பால் கொள்ளும் நம்பிக்கை பெருமையை அளிக்கும் என்பதை இன்றைய வாசகம் நமக்கு தெளிவாக உணர்த்துகிறது.

இன்று நாம் இரண்டு விதமான நம்பிக்கையை காண்கின்றோம். ஒன்று இறைமகன் இயேசு உடனிருந்து அவர்களின் அருளடையாளங்களையும், அற்புதங்களையும், இறைவார்த்தைகளையும் கண்டு, கேட்ட திருத்தூதர் தோமா இயேசுவை காணும்முன்னே நம்ப மறுத்தார், கண்டப்பின்னரே நம்பினார். இயேசுவை ஏற்றுக்கொண்ட யூதர்கள் புறவினத்தார் அவரைக் கண்டதில்லை. எனினும் நம்பிக்கைக் கொண்டு ஆன்ம மீட்பை பெற்றுக்கொண்டார்கள். வசதிகள் வரும்பொழுதும் துன்பங்கள் சூழும்பொழுதும் நாம் நம்மை முழுமையாக நம்புகின்றோம். இல்லை நம்பிக்கையிழந்து துவண்டு போகிறோம். நம்மை காக்க வழிநடத்த நம் ஆண்டவர் இருக்கின்றார், அவரை நம்பினால் நமக்கு மண்ணக விண்ணக வாழ்வில் முடிவில்லா பேரின்பம் அடைவோம் என்பதை முழுமையாக உணர வேண்டும். இன்றும் நாம் இயேசு கிறிஸ்துவை கண்டதில்லை, ஆனால் அவரை

ஏற்றுக்கொண்டோம். தோமாவைப் போன்று சந்தேகத்துடன் ஏற்காமல் முழுமனதாய் அவரை ஏற்று பேருவகைக்கொள்ள இத்திருப்பலியில் இணைவோம், இறையாசீரைப் பெற்று மகிழ்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா, அழியா ஆன்மாக்களை கட்டியெழுப்ப, திருஅவையை வழிநடத்த உம்மால் எமக்களிக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இயேசுவின்மீது அளவிடமுடியாத நம்பிக்கை வைத்து எவ்வித தளர்வும் ஏற்படாமல் அவர்கள் சோதனையில் துயறுரும் வேளையில் பாதுகாக்கப்படவும், கற்பித்தவற்றிலும், நட்புறவிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையின் ஊற்றே எம் இறைவா, இன்று உலகில் நடந்துக் கொண்டிருக்கும் போரினால் பல உயிர் சேதமும், பொருட்சேதமும் நடந்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், நீரே அப்போரினை தடுத்துநிறுத்தி உம் மக்களிடையே ஒற்றுமையும், சமாதானமும் நிலவி அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் தாராள உள்ளம் கொண்டவர்களின் மூலம் நற்செயல்கள் புரிய வைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இறையரசை கட்டியெழுப்பும் எம் இறைவா, நடக்கவிருக்கின்ற தேர்தலில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நல்ல தலைவர்களை நீர் உருவாக்கித் தந்து நாட்டையும், நாட்டு மக்களையும் எவ்விதமான ஆபத்து விபத்துகளும் நேராதபடிக்கு தகுந்த தலைவர்களை தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. குடும்பம் ஒரு கோவில் என்ற வார்த்தைக்கேற்ப இன்றைய நவநாகரீக உலகில் பல்வேறு குடும்பங்களிடையே கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், தாய் தந்தை இவர்களிடைய நம்பிக்கை இன்றி பலவிதமான பிரச்சனைகளும், சந்தேகமும் நிலவி ஒற்றுமை சீர்குலைந்து தவிக்கின்ற இச்சூழலை மாற்றி இவர்கள் புதிய மனிதர்களாக மாற உமது மீட்பின் கட்டளையை அளித்து வழிநடத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# பாஸ்கா காலத்தின் 3ம் ஞாயிறு

**திருப்பலி**
19.04.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *திப. 2: 14, 22-33* II. *1பேதுரு 1: 17-21* *லூக். 24: 13-35*

உயிர்த்த இயேசுவின் உயிருள்ள சாட்சிகளாக வாழ அழைப்பு விடுக்கும் பாஸ்கா காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு வந்திருக்கும் இறைநம்பிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம். தூய

ஆவியால் அருட்பொழிவு பெற்ற சீடர்கள் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக எருசலேம் நகரத்தில் வாழும் இஸ்ரயேல் மக்கள் முன்னிலையில் இறைமகனின் உயிர்ப்பின் மகிமைக்கும், மாட்சிக்கும் தாங்களே போதுமான சாட்சிகள் என்று ஆணித்தரமாகப் பதிவு செய்கின்றனர். பேதுருவின் வீரம்மிக்க இந்தச் சொற்பொழிவு நமக்கு உயிர்த்த இயேசுவின்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவதை இம்முதல் வாசகத்தில் பார்க்கிறோம். மாசுமறுவற்ற ஆட்டுக்குட்டியைப் போன்ற இயேசுவின் விலைமதிப்பில்லாத இரத்தத்தால் நமக்கு மீட்பு கிடைத்துள்ளது. இறந்த அவரை உயிர்ப்பிக்கச் செய்த இறைவன் அவரிடம் நம்பிக்கைக் கொண்டு அவரை எதிர்நோக்கி இருக்கவே நம்மை அழைக்கின்றார் என்பதை இரண்டாம் வாசகம் மூலம் அறிந்துக் கொள்கிறோம்.

நற்செய்தியில், "வாழ்வு கொடுக்க வந்த மீட்பர் இறந்துவிட்டாரே" என்ற துக்கச் செய்தியை பரிமாறியவர்களாக எம்மாவுஸ் நோக்கி பயணிக்கின்றனர் இருவர். இத்தகைய நம்பிக்கையற்ற சூழலில்தான் இறையேசு அவர்களோடு பேசி, தனது வார்த்தையினால் சாந்தப்படுத்துகிறார். அவருடைய வார்த்தைகள் தங்களின் உள்ளத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதை சீடர்கள் உணர்கின்றனர். இறைவார்த்தையில் கடவுளை உணர்ந்தவர்கள், அப்பம் பிடுதலில் கடவுளை முழுமையாகக் கண்டுணர்ந்தனர். இந்த அனுபவத்தைத்தான் நாம் தினம்தினம் கொண்டாடுகிற திருப்பலியில் வாசிக்கப்படுகிறது. இரண்டாவது அப்பம் பிட்கப்படுகிறது. சீடர்கள் அன்று அப்பம் பிட்கப்பட்டபோது இயேசுவைக் கண்டுகொண்டனர், அவர்களின் கண்கள் திறந்தன, ஏனெனில் நம்பிக்கையின் கண்கள் அவர்களுக்கு திறக்கப்பட்டது. இன்று நாம் இயேசுவைக் கண்டு கொள்கிறோமா? அவ்வாறு நாம் கண்டுக்கொள்ள வேண்டுமென்றால் நமது உள்ளத்தைத் திறந்தவர்களாய் உணவு வடிவில் வந்த இறைப்பிரசன்னத்தை நமது உறவுகளில் கண்டு மகிழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. மரணத்தை வென்று வெற்றிக்கொண்ட மைந்தரே, உமது உயிர்ப்பைக் கொண்டாடும் எம் தாய் திருஅவையையும், திருஅவைப் பணியாளர்களையும், உமது உயிர்ப்பின் வல்லமையால் வழிநடத்தி, தூய ஆவியால் நிரப்பி உமக்கு சான்று பகரும் வழியில் மக்களை வழிநடத்திட தேவையான அருள்வரங்களை பொழிந்து காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உம்மை நாங்கள் கண்டுக்கொள்ள உம் இதயத்தை திறந்த இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், ஆட்சியாளர்கள், தங்களிடம் அதிகாரம் இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு இறையச்சமின்றி மக்களை வதைத்துக்கொண்டிராமல் மக்களை மனித நேயத்துடன் நடத்தும் தாராள உள்ளம் கொண்ட தலைவர்களாக அவர்களை மாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, நாட்டில் வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, கடன்பாரம், நோயின்தாக்கம், பிள்ளைகளின் கல்வி மேம்பாடு என பல்வேறுபட்ட பிரச்சனைகள், துன்பங்கள் எம்மை சூழ்ந்துக்கொள்ளும்போது நாங்கள் இறை நம்பிக்கையில் நிலைத்திருக்கவும், இறைபக்தியில் ஆழமாக வளரவும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று கூறியவரே, இன்று உலகில் நடந்துக்கொண்டிருக்கும் போரினால் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகி, பல உயிர்களை பலிகொடுத்துவிட்டு தவிப்போரை உமது பதம் சமர்ப்பிக்கிறோம். இருநாடுகளிடையே நடைபெறும் போரினை தவிர்த்து தங்களுக்குள் ஒற்றுமை, அமைதி, சாதானம் நிலவ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## புனித ஆன்சல்ம் ஆயர்

திருப்பலி
21.04.2026

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இன்று திருஅவையானது புனித ஆன்சல்ம் திருவிழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்தப் புனிதர் தனது 27வது வயதில் துறவியாகி பின்பு அந்த மடத்தின் உபதலைவராகவும் பின் அதிபராகவும் 33ஆண்டுகள் பணிசெய்தார். மடத்தின் பணி நிமித்தமாக இவர் பலமுறை இங்கிலாந்து போக வேண்டியிருந்தது. எனவே, அங்கு இவரை அநேகர் அறிந்திருந்தனர். கான்ட்ரபரி பேராயர் இறந்ததும் இவர் கான்ட்ரபரி பேராயராக நிமிக்கப்பட்டார். 1093 முதல் 1109 வரை பேராயராக பணிபுரிந்தார். புனிதரின் காலத்தில் இங்கிலாந்தை ஆண்டுவந்த மன்னை திருஅவைக்கு பெருத்த அநீதி இழைத்ததால், ஆயர் அந்த மன்னனை எதிர்த்தார். புனிதர் உரோமுக்குச் சென்று ஒரு மடத்தில் சிலகாலம் வாழ்ந்தார். இங்கிலாந்து நாட்டின் மன்னனை திருஅவையை விட்டு நீக்க முடிவு செய்த திருத்தந்தையை இவர் தமது செபத்தால் தடுத்தி நிறுத்தினார்.

"இயேசுகிறிஸ்து தம் இரத்தத்தை சிந்தி திருஅவைக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார். அந்த சுதந்திரத்தை அவர் மிகமிக நேசிக்கிறார்" என்று இவர் அடிக்கடி சொல்லுவார். கடின உழைப்பின் மத்தியிலும் கடவுளின் பிரசன்னம் நம் மத்தியில் இருக்கிறது என்று வலியுறுத்தி வந்தார். புனித தாமஸ் அக்குவினாசிடம் தத்துவயியலும், இறையியலும் பயின்று அதன் பின்பு திருத்தந்தை 11ம் கிளமெண்ட் இந்த புனிதரை திருஅவையின் கோட்பாட்டின் தந்தை என்று அழைக்கலானார். திருஅவையின் உரிமைகளை மன்னர்கள் பறிக்க முயன்றால் இவர் தம்முடைய சுகவசதிகளை தூக்கியெறிந்துவிட்டு போராடுவார். இந்தப் புனிதரைப் பின்பற்றும் நாம் நமது திருஅவைக்கு எதிராக நம்மை திருஅவையிலிருந்து பிரிக்க நினைக்கும் சக்திகளிடமிருந்து இறையேசு, உயிர்த்த ஆண்டவர் நம்மை காப்பாற்ற வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையை தலைமையேற்று நடத்திவரும் உயிர்த்த ஆண்டவரே, புனித ஆன்சலம், மன்னரிடமிருந்து திருஅவையைக் காப்பாற்ற போராடியதுபோல திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், அருட்பணியாளர்கள், பொதுநிலையினர் ஆகிய நாங்கள் அனைவரும் திருஅவையை எல்லாவித விபத்துக்களிலிருந்தும், போராட்டங்களிலிருந்தும் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகளை நீர் ஆசீர்வதிக்க வேண்டுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைத்து நலன்களுக்கும் ஊற்றான இறைவா, எம் நாட்டு தலைவர்களும், பணியாளர்களும், தங்களுக்கு ஏற்படும் சோதனைகளை வென்று எமக்கு தங்கள் பணிகளாலும், பண்புகளாலும் சேவைகள் ஆற்றவும், அதன் வழியாக உமது இறையாட்சியின் கருவிகளாகத் திகழவும் முன்வர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிகாட்டும் தந்தையே இறைவா, ஒவ்வொரு குழந்தையும் இறைபக்தி, ஆன்மீகம், நன்னெறி, கலையுணர்வு, உடல் ஆரோக்கியம், அறிவுத்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றால் வளர்ந்து பகிர்வு, பிறரன்பு, ஒற்றுமை, மன்னிக்கும் மனம் போன்ற உமது மதிப்பீடுகளைக் கற்றுக்கொண்டு நாளைய நல்ல தலைவர்களாக, புனித வாழ்வில் பயணிக்க அருள்தர வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.



# புனிதர்கள் ஜார்ஜ், அடால்பெர்ட்

திருப்பலி
23.04.2026

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

இறையேசுவில் உண்மையுள்ள இறைச்சமூகமே, இன்று நாம் புனித ஜார்ஜ், அடால்பெர்ட் இவர்களின் திருப்பலியைச் சிறப்பிக்க நாம் ஒன்றுக் கூடியுள்ளோம். லிபியா என்றழைக்கப்படும் வெள்ளைக் குதிரைமீது, கொடிய டிராகனைக் கொல்வதுபோல் பாரம்பரிய கதை ஒன்றுள்ளது. துருக்கி நாட்டில் ஜெரோன்ஷியஸ், பாலிகுரோனியாவுக்கு கி.பி. (256-285க்குள்) ஜார்ஜ் மகனாகப் பிறந்தார். தந்தை, கப்பலேதாக்கியாவிலுள்ள உரோமைப்பேரரசில் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். இவர்கள் பரம்பரைக் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களாக வாழ்ந்து, மகனையும், இறைபக்தியில் ஆழமான நம்பிக்கையில் வளர்த்து வந்தனர்.

உரோமைப் பேரரசை தியோக்ளேஷியன் ஆட்சிபுரிந்த காலத்தில், ஜார்ஜ் போர் வீரனாகப் பணி புரிந்தார். உரோமானியர் வணங்கிய நிக்கோமேதியர் பொய்க் கடவுளுக்கு மெய்க்காப்பாளானாகப் பணிபுரிய வைத்தனர். ஜார்ஜ் ஒரு கத்தோலிக்கர் என்பதால் பொய்க் கடவுளை வணங்க மறுத்தார். இதையறிந்த அரசன், ஜார்ஜிடம் இயேசுவை மறுதலித்து பொய்க்கடவுளை வணங்கும்படி

கட்டளைப் பிறப்பித்தான், அதை ஜார்ஜ் மறுத்தார். மூன்றுமுறை கயிற்றால் கட்டி இழுத்துச்சென்று சித்தரவதை செய்தான். இயேசுவே என் கடவுள் என உறுதியுடன் ஜார்ஜ் கூற, வெறிபிடித்த கோபத்துடன் ஜார்ஜ் தலையை வெட்டும்படி அரசன் ஆணையிடுகிறான். அதன்படி கி.பி. 303, ஏப்ரல் 23ல் தலைவெட்டப்பட்டு இயேசுவுக்கு இரத்த சாட்சியாகப் புனிதமடைகிறார்.

கி.பி. 1327ம் ஆண்டு மூன்றாம் ஆண்டு எட்வர்டு அரசனால், இங்கிலாந்தின் பாதுகாவலராக அறிவிக்கப்படுகிறார். மற்றும் போர்த்துக்கல், வெனிஸ், பெய்ரூட், மால்டா, எத்தியோப்பியா, ஜார்ஜியா, பாலஸ்தீன், லித்தோனியா ஆகிய நாடுகளுக்குப் பாதுகாவலராகவும் அறிவிக்கப்பட்டு, வணக்கத்துக்குரியவராக, மக்கள் மனத்தில் வாழ்ந்து வருகிறார். இந்தியாவில் கேரளாவில் உள்ள எடப்பள்ளியில் “புனித ஜார்ஜ் திருத்தலம்” மிகவும் பிரபலமானது. இவரின் அசைக்க முடியாத இறைநம்பிக்கையை நாமும் பெற்று வாழ்வோம் என உறுதியெடுத்துப் பக்தியுடன் திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நன்மையின் ஊற்றாகிய இறைவா, திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார், வேதியர் இவர்களின் படிப்பினைகளை ஏற்று உண்மையான கத்தோலிக்கர்களாக, இறைவார்த்தையை வாழும் முயற்சிகளில் ஈடுபட்டு, எங்களுடைய வாழ்வில் மாற்றத்தைக் கண்டிட அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வும் வழியுமான இயேசுவே, எங்கள் வாழ்க்கையில் பணம், பதவி, அதிகாரம் இவற்றைக் கொண்டு சாத்தான் சோதிக்க வரும்போது, அச்சோதனையில் வீழ்ந்துவிடாமல் புனித ஜார்ஜியின் உறுதியான நம்பிக்கையை மனதில் பதித்து கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழும் வரத்தை வழங்க வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் தெய்வமே இறைவா, இன்று பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு, வருந்திடும் மக்களை நலமாக்கிடவும், பிரச்சனைகளில் சிக்கித் தவிப்போரை மீட்டு உமது புனித வாழ்வில் வழிநடத்திடவும், அருள்புரியும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.



# சிக்மரிங்கன் நகர்ப் பிதேலிஸ் மறைசாட்சி

**திருப்பலி**
**24.04.2026**

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறைச்சமூகத்தில் ஒன்றித்திருக்கும் இறைக்குலமே, இப்புனிதர் ஜெர்மனி நாட்டிலுள்ள சிக்மரிங்கன் என்ற நகரில் பிறந்து கல்விக் கலைகளைக் கற்று மிகத் திறமையுடன் வழக்கறிஞர் தொழில் செய்து வந்தார். “ஏழைகளின் வக்கீல்” என்று இவரை அழைப்பார்கள். இவர் குருப்பட்டம் பெற்று கப்புச்சின்

சபையில் பிதேலிஸ் என்ற பெயரில் அழைக்கப்பட்டார். இவர் கடுமையான தவமுயற்சிகளைச் செய்வார். இவர் பணியில் இருந்தபோது ஏழைகளின் கொடுமைகளை நீக்க பணம் எதுவும் எதிர்ப்பார்க்காமல் நீதிமன்றங்களில் வழக்காடுவார். இறை பக்தியினால் தூண்டப்பட்டு அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று திருப்பலியிலும், திருவிவிலியத்தை தியானிப்பதிலும் பங்கேற்பார். இவர் கண்ணீருடன் செபித்துக்கொண்டு பாவங்களுக்கு பரிகாரமாக சாட்டையால் தன்னை அடித்துக் கொள்வார். திருஅவையிலிருந்து விலகிச் சென்றவர்களை உயிராபத்துக்களையும் பொருட்படுத்தாமல் அநேகரை மனம் திருப்பினார். திருமறைக்கு எதிரானவர்கள் இவரைக் கொல்ல திட்டம் தீட்டி, இரவில் நடந்து செல்லுகையில் இவரை ஒருவன் துப்பாக்கியால் சுட்டான். ஆனால் இவர் புதுமையாக தப்பித்துக் கொண்டார். மீண்டும் இவரை 20பேர் கொண்ட கும்பல் மற்றும் அவர்களுடைய தலைவர்கள் படைக்கலன்களுடன் இவரைக் கொடுமையாய் அடித்துக் கொன்றனர். இறக்கும்போதும் அவர்களுக்காக செபித்துக்கொண்டே இறந்தார். கல்வினிஸ்ட் பதித சபையில் சேர இவர் இணங்காததால் கொன்ற இவர்கள் பிதேலிஸ் இறந்த 5 மாதங்களுக்குப்பின் மனம் திரும்பினர். பிதேலிஸ் கப்புச்சின் துறவற சபையில் முதல் வேதசாட்சி என்பது குறிப்பிடத்தக்கது. நாமும் இவரின் வழிகளை பின்பற்றி நம்பிக்கை வாழ்வு வாழ்ந்து சாட்சிய வாழ்க்கை வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் அனைத்து அருட்பணியாளர்கள், திருத்தந்தையின் எண்ணங்களும், கருத்துக்களும் நிறைவேறவும், உமக்காகவே தங்களின் வாழ்வை சிறப்பான விதத்தில் அர்ப்பணித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமுள்ள இறைவா, பழிவாங்கும் எண்ணம், வெறுப்பு, அநீதி போன்ற உணர்வுகளால் ஏழை எளிய மக்கள் வாழ்வினை இழந்து நிற்கும் இவ்வேளையில் நீரே நீதியுள்ளவராய் இருந்து தங்களின் உரிமைகளுக்கு நீதி வழங்கி அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பே உருவான இறைவா, இன்றைய புனிதர் பிதேலிஸ்போல நாங்களும் ஏழைகளுக்கு பல உதவிகளை செய்யும் நல்ல மனதையும், இயேசுவின்மீது நம்பிக்கையோடு செபிக்கவும், இறுதிவரை இயேசுவுக்காக வாழும், நல்லுள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித மாற்கு நற்செய்தியாளர் விழா

திருப்பலி
25.04.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவை புனித மாற்கு நற்செய்தியாளரின்

திருவிழாவை கொண்டாட நம்மை அழைக்கின்றது. இவர் சில நேரங்களில் யோவான் மாற்கு என்றும் அழைக்கப்பட்டார். இவரின் இல்லம் தொடக்ககால கிறிஸ்தவர்கள் கூடுமிடமாக இருந்தது. புனித மாற்கு, புனித பவுலோடும் தன் உறவினரான பர்னபாவோடும் நற்செய்திப் பயணங்களில் பங்கேற்றார். எகிப்தின் அலெக்சாந்திரியா நகர் திருஅவையை நிறுவியதாக மரபு கூறுகிறது. இன்றைய நற்செய்தி வாசகத்தில், "இயேசு சீடர்களை நோக்கி, உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைச்சாற்றுங்கள் என்றார் (மாற்கு 16:15).

இயேசு கொண்டு வந்த நற்செய்தி என்ன? கடவுள் நம்மை அன்பு செய்கிறார், நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்பதால் கடவுள் காட்டும் வழியில் நடந்து சென்று அவரிடத்தில் நிலையான அமைதியையும் மகிழ்ச்சியையும் கண்டுக்கொள்ள வேண்டும். இச்செய்தியை இயேசு ஒரு சில மனிதர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட வேண்டிய இரகசியமாகக் கருதவில்லை. மாறாக, உலகில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் இந்நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பதே இயேசுவின் பார்வை. "நற்செய்தி அறிவித்தல்" வெறும் வார்த்தைகளால் நடைபெறுகின்ற நிகழ்வு அல்ல. மாறாக, நற்செய்தி என்பது ஒரு வாழ்க்கை முறை. இயேசுவின் போதனையை உள்ளத்தில் ஏற்று, அதை வாழ்வில் கடைப்பிடிப்பதே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம். இதையே நாம் "சான்று பகர்தல்" அல்லது சாட்சிய வாழ்வு என்கிறோம். ஆகவே நற்செய்தியின் ஆற்றல் இவ்வுலகை உருமாற்றும் திறன் கொண்டது என்பதை நாம் நினைவில் கொண்டவர்களாக அதற்கு தகுந்த விதத்தில் எங்களின் எண்ணங்களை மாற்றி இறைவனை உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும் வரம் வேண்டி இப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, திருஅவையிலுள்ள ஒவ்வொருவரும் இயேசுவின் போதனையை உள்ளத்தில் ஏற்று, அதை வாழ்வில் கடைப்பிடிப்பதே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம் என்பதை நாங்கள் உணரும் ஆற்றலை தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, இயேசுவின் போதனை மனிதரை ஓர் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் வழியாக உள்ளது. கடவுளின் ஆட்சி நிறைவுறும் காலம் இவ்வுலகைக் கடந்தது என்பதை நாங்கள் உணர்ந்து, உம்மீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர்களாக மாற்றி உம்மை ஏற்றுக்கொள்ளும் தகுதியுள்ளவர்களாக வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, இவ்வுலகில் அன்பு நிலவும் ஓர் இடமாக, நீதி தவழ்கின்ற தளமாக மாற்றியமைத்திட நாம் உழைக்க வேண்டும் என்பதும் நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம் ஆகும் என்பதை அறியும் ஆற்றல் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.



# இறையழைத்தல் ஞாயிறு

திருப்பலி
26.04.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

I. *திப. 2: 14, 36-41* II. *1பேதுரு 2: 20-25* *யோவா. 10: 1-10*

இன்று நாம் பாஸ்கா காலம் 4ம் ஞாயிற்றுக்கிழமையில் பயணம் செய்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய முதல் வாசகம் பேதுரு மற்றும் பதினொருவரும் சேர்ந்து மக்களிடையே பெரும் விழிப்புணர்வை எடுத்தியம்புவதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சிலுவையில் அறையப்பட்ட இயேசு ஆண்டவரும் மெசியாவாகவும் உள்ளார் என்ற கடவுள் கூறுவதை உறுதியாக சொல்கிறார். "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று மக்கள் கேட்க, பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறவும், மனம்மாறவும், திருமுழுக்குப் பெறுங்கள் என்றும், தூய ஆவியாரைக் கொடையாகப் பெற்று நெறிக்கெட்ட வாழ்விலிருந்து விடுபட்டு கடவுள் அழைக்கும் அழைப்பை ஏற்றுக்கொள்ளவும் பணிக்கிறார்.

இரண்டாம் வாசகமான பேதுருவின் திருமுகத்தில் கிறிஸ்து நமக்காக துன்புற்று ஒரு முன்மாதிரியை அறிந்திருப்பதாலும், தம் காயங்களால் நம்மை குணப்படுத்தியிருப்பதாலும், சிலுவையைச் சுமந்து நம் பாவங்களை அவரே ஏற்றுக்கொண்டதாலும், வழித்தவறிய ஆடுகளாய் நாம் இருந்தும் அவரே நம்மை ஏற்றுக்கொள்கிறார் என்று கூறுகிறார். நற்செய்தியில் ஆண்டவர் உறுதியுடன் கூறுவதை இவரும் உறுதிப்படுத்துகின்றார். எப்படியென்றால் கொட்டிலின் வழியாக செல்பவரே நல்ல ஆயர். மற்றவரெல்லாம் திருடராக இருப்பர், அதுபோல் ஆடுகளும் ஆயனின் குடில்கேட்டு அவர் பின்னே செல்லும் அறியாத ஒருவரை அவைகள் பின்தொடராது. திருடுவதற்கும், கொல்வதற்கும், அழிப்பதற்குமன்றித் திருடன் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் ஆடுகள் வாழ்வைப்பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளதாக ஆண்டவர் உறுதியாகக் கூறுகிறார். ஆகவே நம் வாழ்வை அழிக்கவரும் கொள்ளையனை விட்டுவிட்டு நம் நல்லாயனை பின் தொடர்ந்து வாழ்வில் மகிழ்வினைப் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் பக்தியோடு பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர் மற்றும் திருநிலையினர் அனைவரும் உம் வழியைப் பின்பற்றி குற்றம் கருதாது மக்களை நேசித்து நல்லாயர்களாக வழிநடத்திச் செல்ல வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று மொழிந்த இறைவா, உலகில் நிகழ்ந்துக்கொண்டிருக்கும் போர் அபாயங்களிலிருந்து விடுபட்டு மக்கள்

அமைதியுடன் வாழவும், உலக வல்லரசு நாடுகளின் தலைவர்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மனதில் கொண்டு நல்ல சமாதான முடிவுகளை மேற்கொள்ளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகின் ஒளியே இறைவா, மலைமேல் ஏற்றிய விளக்கு உலகிற்கு ஒளிக்கொடுத்து பிரகாசிப்பதுபோல, உம் அன்பின் ஒளி எம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பற்றியெரிந்து குடும்பங்களிலும், பங்குகளிலும், நாட்டிலும் பிரகாசமாக உமது நற்செய்தியின் ஒளியில் நாளும் நாங்கள் தொடர்ந்து நடக்க, வாழ உம் தூய ஆவியாரின் அருட்பொழியை எங்களுக்கு நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. தூய்மையின் உன்னதரே எம் இறைவா, உம் சிலுவைப்பாடுகளின் வழியாக எங்கள் குடும்பங்களையும், எம்மைச் சுற்றியுள்ள மக்களையும் பாவவாழ்விலிருந்து நாங்கள் தூய்மையடைந்து, உமக்கேற்ற மக்களாக உம்மைப் பின்தொடர்ந்து நாளும் நடந்திட எங்களுக்குத் தேவையான அருள்வரங்களை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## மான்போர்ட் நகர்ப் புனித லூயிஸ் மரிய கிரிஞ்ஞோன்

**திருப்பலி**
**28.04.2026**

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் மான்ஃபோர்ட் நகர் புனித லூயிஸ் அவர்களின் திருவிழாவை நினைவு கூறும் இந்நேரத்தில் திருத்தந்தை 2ம் ஜான்பால் அவர்களால் இப்புனிதர் மரியன்னை பக்திக்கு காரணமானவர் என்று புகழாரம் சூட்டப்பட்டவர். 1673ல் மான்ஃபோர்ட் என்ற இடத்தில் பிறந்து, 19வயதில் இறையியல் படிக்க சென்றவர் தன்னிடம் உள்ள பணத்தையும் ஆடைகளையும் வழியோரம் இருந்த ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தார். காலப்போக்கில் 27வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர், மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு சேவையாற்றுவதை வாழ்வாக்கிக் கொண்டவர்.

1705ல் 32வயதில் கிராமங்கள், நகரங்கள் என 17 ஆண்டுகள் ஆண்டவரின் வாழ்வுதரும் மீட்புச்செய்தியைப் போதித்தார். இவரின் புத்தகங்கள்: (1) உண்மை பக்தி, (2) செபமாலையின் இரகசியம் ஆகியவை இன்றும் புகழ் வாய்ந்தவை. அனைத்தையும் இறைதிட்டமென ஏற்றுப் பிறருக்காகவே மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, ஏழை மக்கள் வாழ்வு பெறவும், நோயுற்றோர் சுகம் பெறவும் பணியாற்றியவர். 1716, ஏப்ரல் 20ல் விண்ணுலகம் அடைந்த இவர் 1947ல் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார். தான் பிறந்த பிறப்பின் பொருளை அறிந்து கொள்ளும் எல்லோருமே பிறருக்காக தங்களையே கையளிப்பவர்கள், இறைவனின் கையாக இருப்பார்கள் என்பதற்கு இவரே சான்று என்பதை மனதில்கொண்டு வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கினங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் தருவேன் என்றுரைத்த இறைவா, உம்மில் நம்பிக்கையோடு கேட்ட அனைவரும் அதை பெற்றுள்ளார்கள் என்பதை நாங்களும் உணர உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்று ஐந்து அப்பங்களை கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தீரே, இன்றும் எண்ணிலடங்கா மக்களுக்கு உம்மையே உணவாகத் தரும் உம்மை இறைவனாக, ஆண்டவராக ஏற்று ஆராதிக்க வரம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. அனைத்தையும் இறைத்திட்டமென ஏற்று பிறருக்காகவே வாழ்ந்து நற்செய்தி போதித்த புனித லூயிஸ் தே மான்ஃபோர்ட், ஏழை மக்கள் வாழ்வு பெறவும், நோயாளிகள் நலம் பெறவும் தொடர்ந்து பணியாற்றியதைப் போல எமது வாழ்விலும் நாங்கள் சந்திக்கும் எளிய மக்களுக்கு இயன்ற உதவிகளை நிறைவாய் செய்யும் மனத்தை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# சியென்னா நகர்ப் புனித கத்ரீன்

திருப்பலி
29.04.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, இப்புனிதையின் வரலாறு நீண்டது சுருக்கமாக இங்கே மனதில் கொள்ளுவோம். தாய்வழிச் சமுதாயம் தான் முதலில் என வரலாறு கூறுகிறது. திருவிவிலியம் பழைய ஏற்பாட்டில் தலைமை ஏற்பவர்களாக, போராடுபவர்களாக, நீதி வழங்குபவர்களாக பெண்கள் (தெபோரா, யூதித், எஸ்தர்) இருந்தனர் என கூறுகிறது. புதிய ஏற்பாட்டில் (லூக்.8:1-3) இறையேசுவோடும் திருத்தூதர்களோடும் பெண்களும் பணிபுரிந்தனர் என பறைசாற்றுகிறது. மணமாகாதவர்மட்டுமல்ல, மணமானவர்களும் குறிப்பாக பெண்களும் அநேகர் புனிதைகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். திருஅவை வரலாற்றில் இந்த வரிசையில்தான் இப்புனிதர் பல இன்னல்களுக்கு மத்தியில் தன்னை அடையாளப்படுத்தாமல் இறை இயேசுவை அடையாளப்படுத்தி வாழ்ந்தார். பெற்றோருக்கு 25 பிள்ளைகளில் கடைக்குட்டி வாழ்ந்த காலம் கி.பி. 1347-1380. இளம்

வயதிலேயே மாடியேறும்போது ஒவ்வொரு படிக்கட்டுக்கும் ஒரு அருள்நிறைந்த மரியே என்ற செபம் சொல்லுவாள். தாய் அழகு படுத்திச்சொல்லியும் தன் கூந்தலை வெட்டி, அழகு வேண்டாம், திருமணம் வேண்டாம் என இறைஞானத்தில் வளர்ந்தவர். அன்னைமரி இறையேசு மற்றும் வான் வீட்டாரையும் இரண்டு முறை காட்சி கண்டு வார்த்தையை கேட்டு காயங்களை ஏற்றவர். ஆன்ம ஈடேற்றத்திற்கு உழைத்து பல பெண்களின் மதிப்பையும் தோழமையும் பெற்றவர்.

திருத்தந்தை 11ம் கிரகோரியார் காலத்தில் மீண்டும் சிலுவைப்போர் பிளாரன்ஸ் நகர் தள்ளிவைப்பு போராட்டம், 9ம் கிரகோரியார் மறைவுக்குப் பிறகு திருத்தந்தை 6ம் ஹர்பனுக்கு எதிரான போராட்டம் என பல திருஅவை போராட்டங்களில் திருச்சபைக்கு உறுதுணையாய் பணிபுரிந்தவர். இதனால் திருத்தந்தைக்கே இவரது அறிவுரை தேவைப்பட்டதால் உரோமை வர இவரை அழைத்தார். இவரும் அங்கு சென்று தங்கினார். தொடர் பணியினால் இவரது பல தியாகத்தால் நாளுக்கு நாள் உடல் நலிவடைந்து, தனது இளம் வயதிலேயே அதாவது 33 வயதிலேயே தன் இன்னுயிரை விட்டு விண்ணகம் சேர்ந்தார். இவரைப்போல நாமும், திருஅவைக்கும் சமூகத்திற்கும் உழைக்க இறைவனை அடையாளப்படுத்த சபதம் ஏற்போம். செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, தியாகம் நிறைந்த வரலாறு எங்கள் திருஅவையில் உண்டு. அதேபோல எங்கள் திருஅவையின் அனைத்து அருள் பணியாளர்களுடன் வாழவும் உமது இறையருளை பெறவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பெண்களுக்கு சிறப்பிடம் கொடுத்த இறைவா, இன்னும் பல பெண்கள் திருஅவைக்காக பல பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது இறைப்பணியில் நீர் துணைநின்று பாதுகாத்து, ஆசீர் அளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆதரவளிக்கும் இறைவா, மனிதர்களின் பலவிதமான சுரண்டல்களினால் (கல், மண், மரம், கடல்மாசு, நீர்வளம்) பருவநிலை மாற்றங்கள் ஏற்பட்டு, பேரிடர்கள் நிகழ்கின்றன. அதிகமான வெப்பத்தால் நாங்கள் அவதிப்படுகிறோம். உமது மன்னிப்பு எனும் வரத்தினால் இப்பாவங்களை மன்னித்து எங்களுக்கு உதவிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிநடத்தும் இறைவா, எமது நாட்டில் நடக்க இருக்கும் தேர்தலில் மக்களுக்காக உழைக்கும் சிறந்த தலைவர்களையும், நல்ல ஆட்சியாளர்களையும் உருவாக்கித் தந்து, கெட்ட எண்ணம் கொண்ட அரசியல் தலைவர்களிடமிருந்து எங்களையும் நாட்டையும் காத்திடவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித ஐந்தாம் பயஸ்

திருப்பலி
30.04.2026

## முன்னுரை

திரு. ஜான் சுரேஷ்

இறையேசுவின் நம்பிக்கையாளர்களே, இன்றைய நற்செய்தி வாசகத்தின்படி சான்று பகரும் வாழ்வு வாழ்ந்தவர் இன்றைய விழா நாயகர் திருத்தந்தை புனித ஐந்தாம் பயஸ். இவர் இத்தாலி நாட்டில் அலெக்சாண்டிரியா நகருக்கு அருகில் கி.பி. 1504ம் ஆண்டு பிறந்தார். ஏற்ற வேளையில் தோமினிக்கன் குருத்துவ சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றார். பிறகு ஆயராகவும் கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டு கி.பி. 1566ம் ஆண்டு திருத்தந்தையாக உயர்த்தப் பெற்றார். 16ம் நூற்றாண்டுத் திருஅவையின் மாபெரும் நிகழ்ச்சியாக வரலாற்று புகழ்பெற்றது. திரித்தெந்தின் பொதுச் சங்கம், தீர்மானங்களை நிறைவேற்றுவதில் பெரும் சவாலை சந்தித்தார். துருக்கியரின் சீற்றத்தை எதிர் கொண்டார். குரு மடங்களுக்குள் பெரிய சீர்த்திருத்தங்களை கொண்டு வந்தார். திருத்தம் செய்த புதிய திருப்பலி நூலை வெளியிட்டார், புதிய திரித்தெந்தின் மறைக்கல்வி நூல் வெளியிட்டார். திருஅவையின் குறைபாடுகளை களைந்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார். உணவின்றி தவித்தோருக்கும், நோயுற்றோருக்கும் பல மருத்துவமனைகள் கட்டி மருத்துவ சேவையும் புரிந்தார். திருத்தந்தையாக இருந்தாலும் தன் சபை ஒழுங்குகளை விடாமல் கடைப்பிடித்து வாழ்ந்தார். நாமும் இவரின் வாழ்வை பின்பற்றுவோம். இயேசு நிக்கோதேமுவிடம் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று உரைத்த வார்த்தைக்கேற்ப, நாம் நமது பழைய வாழ்வை களைந்து புது வாழ்வுக்காக பிறப்போம், நம் புனிதரின் வாழ்வைப்பின்பற்றி வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், அருள் பணியாளர்கள், துறவறத்தார் அனைவரும் தாங்கள் அழைத்த அழைப்பில் புனித ஐந்தாம் பத்திநாதரைப் போல் திடமான பற்றுறுதியோடு திருஅவை புனிதத்தை நோக்கி பயணிக்கும் அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, புனித ஐந்தாம் பயசைப் போல் எங்கள் குடும்பங்கள், அன்பியங்கள், இயக்கங்கள், பக்த சபைகள், போன்ற அமைப்புகளும் எத்தனை சவால்கள், வந்தாலும், எதிர்கொண்டு வெற்றியடைய உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, அனைத்து மக்களும் எந்த பேரிடர்கள் தாக்கி வாழ்வாதாரம் இழக்காமலும், சமய மோதல் ஏற்படாமல் நல்லிணக்கத்தோடும் ஒற்றுமை, சமாதானம், மகிழ்ச்சியோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...




### வாழ்வை மாற்றும்

# புனித வாரம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

தவக்காலத்தை முடித்துக்கொண்டு புனித வாரத்தில் கால்பதிக்கும் நாம், ஆண்டவருடைய திருப்பாடுகளில் பங்குகொண்டு, நடக்கவிருக்கும் வழிபாடுகளின் முக்கியத்துவம் அறிந்து அத்தோடு நம்மை இணைக்கும் வாரம் இது. மீட்பு மறை உண்மையில் மிகவும் முக்கியமானதுதான் இறப்பும் உயிர்ப்பும். துன்பமின்றி உயிர்ப்பில்லை. பெரிய வெள்ளி இன்றி உயிர்ப்பு ஞாயிறும் இல்லை. "கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டுமல்ல அவருக்காகத் துன்பங்களையும் ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள்" (பிலி.1:29). இந்த புனித வாரத்தை நமக்கான நல்லதொரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி முழுமையாக நம்மை இறைவனுக்கு கொடுப்போம். அதற்கு இந்த புனித வாரத்தை பற்றிய முழுமையான தெளிவு நம்மில் இருப்பது அவசியம். வாருங்கள் இயேசுவோடு நாமும் இந்த புனித வாரத்திற்குள் நுழைவோம் ... இம்முறை எப்போதும் போல அல்ல, புனித வாரத்தின் சாரம் அறிந்தவர்களாய், நன்கு புரிந்தவர்களாய் உணர்ந்தவர்களாய்... நுழைவோம்.

**குருத்து ஞாயிறு :** குருத்து ஞாயிறு புனித வாரத்தின் தொடக்கம். இயேசுவின் பாடுகளைப் பற்றி தியானிப்பதால் இதனைப் பாடுகளின் ஞாயிறு என்றும் அழைப்பார்கள். இயேசுவின் பாடுகளைப் பற்றியும் அதற்குக் காரணமான நமது பாவங்களைப் பற்றியும் சிந்தித்து அதற்கானப் பரிகாரம் செய்யவும், இரக்கச் செயல்களிலும் ஒறுத்தல் முயற்சிகளிலும் ஈடுபட்டு இறை உறவையும் மனித உறவையும் வலுப்படுத்தும் அருளின் காலமான தவக்காலத்தின் உச்சக்கட்டம் தான் இந்த புனித வாரம். இயேசு தான் பாடுபடுவதற்கு முன்னால் கடைசி முறையாக ஜெருசலேம் நகரில்

நுழைந்த போது அவரது சீடர்களும் மக்களும் அவரை ஆர்ப்பரிப்போடு குருத்தோலைகளை கையில் ஏந்தி வரவேற்ற நிகழ்ச்சியை நினைவு கூர்வதுதான் இந்த குருத்து ஞாயிறாகும். வரலாற்றுப் பின்னணி இந்தக் கொண்டாட்டம் ஏறக்குறைய 6ம் நூற்றாண்டிலிருந்தே திருச்சபையால் கொண்டாடப்பட்டு வருகிறது. வெற்றி வாகையோடு திரும்புகின்ற அரசர்களை மக்கள் குருத்தோலைகளை ஏந்தி ஆர்ப்பரிப்போடு வரவேற்பது யூதமக்களின் வழக்கம். உதாரணமாக இயேசுவிற்கு முன்னால் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு யூத மக்கபேயுஸ் அரசர் சிரிய நாட்டைத் தோற்கடித்துவிட்டுத் திரும்பும் போது மக்கள் அவரை வரவேற்றதை 1மக்கபேயர் 13:51ல் காணலாம்.

குருத்து ஞாயிறு தொடங்கி அந்த வாரம் முழுவதும் இயேசுவின் வாழ்வில் மிகவும் முக்கியமான நாட்களாக அவர் இந்த உலகிற்கு வந்ததன் நோக்கம் நிறைவேறும் இறுதி நாட்களாக அமைகின்றன. அவர் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்த நாள் ஏப்ரல் 7. கி.பி 30ம் ஆண்டு என்று வரலாற்று நிபுனர்கள் கருதுகின்றனர். ஜெருசலேமில் நுழைந்த அன்று ஜெருசலேம் ஆலயத்தில் மக்களுக்குப் போதித்துவிட்டு இரவு பெத்தானியா திரும்பி ஓய்வு எடுக்கிறார்.

**திங்கள் :** மறுநாள் திங்கள் தனது அப்போஸ்தலர்களோடு மீண்டும் தேவாலயம் செல்கின்றார். அன்றும் மக்களுக்குப் போதித்த பிறகு பெத்தானியா திரும்புகிறார்.

**செவ்வாய் :** மறுநாள் செவ்வாய் அன்று ஆலயத்தில் போதிக்கும்போது மதத் தலைவர்கள் இயேசுவோடு விவாதம் செய்கின்றனர். அன்று மாலை பெத்தானியா திரும்பும் முன் ஜெருசலேம் தேவலாயம் விரைவிலேயே அழிக்கப்படும் என்று முன்னறிவிக்கின்றார்.

**புதன் :** புதன் அன்று பெத்தானியாவில் தங்கி தனது பாடுகளுக்காக தன்னையே தயாரிக்கின்றார். அன்றுதான் இயேசுவைக் காட்டிக் கொடுப்பது பற்றி யூதாஸ் மற்றவர்களோடு இரகசியத் திட்டம் போட்டான்....

**பெரிய வியாழன் :** பேதுருவையும், யோவானையும் கடைசி இராவுணவு தயாரிப்பதற்காக அனுப்புகிறார். தனது அப்போஸ்தலர்களோடு மாலை 7 மணியளவில் இறுதி இரவு உணவு உண்ணும்போதுதான் தனது அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவுகிறார். யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பதையும், பேதுரு தன்னை மறுதலிக்க இருப்பதையும் முன்னறிவிக்கிறார். நற்கருணையை ஏற்படுத்திய பின் நீண்ட நேரம் அவர்களோடு உரையாடுகின்றார். இரவு 10 மணியளவில் கெத்சமனித் தோட்டத்தில் செபிக்கச் செல்கிறார். 11 மணியளவில் படைவீரர்கள் இயேசுவைக் கைது செய்து முதலில் அன்னாஸ் பிறகு தலைமைக் குரு

கைப்பாஸ் இல்லத்திற்கு கூட்டிச் செல்கின்றார்கள். பேதுருவின் மறுதலிப்பு அங்கே நடக்கிறது. தலைமைக் குருவின் காவலர்கள் இயேசுவை துன்புறுத்தி அவமரியாதை செய்கின்றனர்.

**பெரிய வியாழன் பற்றிய சில குறிப்புகள் :** இயேசுவின் சீடத்துவ அன்பைக் குறிக்கின்றது. 4ம் நூற்றாண்டில் பாதம் கழுவும் சடங்கு திருமுழுக்கோடு இணைந்திருந்தது. பின் துறவற மடங்களில் மாத்திரம் இடம்பெற்றது. 7ம் நூற்றாண்டிலிருந்து புனித வியாழன் அன்று எல்லா ஆலயங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இப்பழக்கம் இன்றும் தொடர்கிறது.

**"உன்னதங்களிலே"க்குப் பின் ஆலய மணிகள் ஒலிப்பதில்லை ஏன்?** புனித வியாழன் அன்று, தவக்காலத்தில் பாடாத உன்னதங்களிலே என்ற பாடல் ஆடம்பரமாக பாடப்பட, ஆலய மணிகள் ஒலிக்கப்படுகின்றன. மேலும் மீண்டும் பாஸ்கா ஞாயிறு அப்பாடல் பாடும் வரை எந்தவிதமான மணியோசையோ ஆடம்பர இசைக்கருவிகளோ ஒலிக்கப்படமாட்டாது. இந்த வழக்கம் கி.பி 850 ஆண்டு முதலாகவே பின்பற்றப்பட்டு வருகிறது. ஆடம்பர இசையை தவிர்க்கும் இதனை காதுகளுக்கு நோன்பு என்று கூறுவார்கள்.

**இன்று காணிக்கை சேர்ப்பதற்கு சிறப்பேதும் உண்டா?** இன்று சேகரிக்கப்படும் காணிக்கைக்கு சிறப்புண்டு. இன்று ஏழைகளுக்காக, பசி, பிணி ஒழிப்புக்காக காணிக்கை எடுக்கப்படுகிறது. இத்தவக்காலத்தில் நாம் நோன்பிருந்தோம். பல தேவைகளை குறைத்தோம், மாமிச தவிர்ப்பை மேற்கொண்டோம். இதனால் நமது கையிருப்பை இல்லாதாரோடு பகிரும் போது தான் நமது நோன்பிற்கு பலமிருக்கும். திருவழிபாட்டு ஆண்டில் இந்த நாளுக்கு மட்டுமே "அன்பும் நட்பும் எங்குள்ளதோ, அங்கே இறைவன் இருக்கின்றார்" என்ற காணிக்கைப் பாடலைப் பாட பரிந்துரைக்கின்றது.

**நற்கருணை பவனி இடம்பெறுவதன் நோக்கம் யாது?** நன்றி மன்றாட்டுக்கு பின் நற்கருணையானது வேறோர் இடத்திற்கு பவனியாக எடுத்துச் செல்லப்படுகிறது. இது இயேசு இராவுணவு மேசையிலிருந்து, கெத்சமனி தோட்டத்திற்கு செபிக்கச் சென்றதை அடையாளப்படுத்துகின்றது. இயேசு தன்னோடு விழித்திருந்து செபிக்க மூவரை அழைத்துச் சென்றார். "என்னோடு விழித்திருந்து செபியுங்கள்" என்றார். இறைமக்கள் புனித வியாழன் மாலையிலிருந்து பாஸ்கா திருவழிப்பு வரை 40 மணிநேர நோன்பிருந்ததாக தூய ஐரேனியுஸ் மற்றும் தூய அகுஸ்தீனார் சான்று பகர்கின்றார்கள். நம் இயேசு இன்றும் நம்மை அழைக்கின்றார். தன்னோடு விழித்திருந்து செபிக்க.

**பெரிய வெள்ளி :** மறுநாள் பெரிய வெள்ளி காலை 6 மணிக்கு யூதத் தலைமைச் சங்கம் இயேசுவுக்கு தீர்ப்பிடுகின்றது. பிறகு 9 மணியளவில்

பிலாத்துவிடம் அழைத்துச் செல்லப்படுகின்றார். அங்கிருந்து ஏரோதுவிடமும் பிறகு பிலாத்துவிடமும் அழைத்துச் செல்லப்பட்டு 11 மணியளவில் தீர்ப்பிடப்படுகிறார். கசையடிகளைத் தொடர்ந்து முள்முடி சூட்டப்படுகின்றார். கல்வாரிக்குச் சிலுவைப்பயணம் தொடங்குகிறது. 12 மணிக்குச் சிலுவையில் அறையப்பட்டு ஏறக்குறைய 3 மணி நேர கொடிய வேதனைக்குப் பிறகு மதியம் 3 மணியளவில் சிலுவையில் மரிக்கின்றார் இயேசு. இயேசுவின் உடலைப் பெற அரிமத்தியாவின் சூசை, பிலாத்துவிடம் அனுமதி கேட்க 5 மணியளவில் சுருக்கமான அடக்கச் சடங்குகள் அவசர அவசரமாய் நடத்தப்படுகின்றன.

**புனித வெள்ளி பற்றிய சில குறிப்புகள் :** புனித வெள்ளியன்று நோன்பு, மாமிச தவிர்ப்பு கடைபிடிக்க வேண்டுமா? உடன் பதில் ஆம் கடைப்பிடிக்க வேண்டும். இது அன்பினால் உந்தப்பட்ட நோன்பு. இதனை "பாஸ்கா நோன்பு" என்பார்கள். தவக்கால நோன்பைவிட மாறுபட்டது. திருச்சபையின் தொடக்ககாலத்திலேயே புனித வெள்ளி, புனித சனி ஆகிய நாட்களில் நோன்பு இருந்ததற்கான சான்றுகள் உண்டு. உணவு மற்றும் நீர் கூட அருந்தாமல் இருந்தார்கள் என்று ஹப்போலிட்டஸ் எழுதிய "திருத்தூது மரபுகள்" சான்று பகர்கின்றது.

கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் தியானிப்பதற்கு ஏற்றவாறு வழிபாடுகள் : (1) இறைவார்த்தை வழிபாடும், பொது மன்றாட்டும், (2) திருச்சிலுவை ஆராதனை மற்றும் (3) திருவிருந்து என மூன்று பகுதிகளைக் கொண்டது. புனித வியாழன் வழிபாட்டின் தொடர்ச்சியாக புனித வெள்ளி வழிபாடு அமைகின்றது. கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கினார் என்பதை குறிக்க பீடம் பொலிவிழந்து காணப்படுகிறது. பாவத்தினால் மனிதன் இறைவன் முன்னிலையில் வலுவிழந்து போகின்றான் என்பதன் அடையாளமாக குருவானவர் பீடத்திற்கு முன்னால் முகம் குப்புற விழுந்து செபிக்கிறார். இன்றைய தினம் மட்டுமே திருப்பலி இல்லாமல் நற்கருணை விருந்து இடம்பெறுகின்ற ஒரே நாள். இதற்காக நேற்றைய (புனித வியாழன்) திருவழிபாட்டில் போதியளவு அப்பம் ஆசீர்வதிக்கப்படுகின்றது.

தொடக்கத்தில் புனித வெள்ளி எவ்வித சிறப்பு வழிபாடும் இல்லை. 4ம் நூற்றாண்டில் தான் சிலுவையை வணக்கம் செய்யும் பழக்கம் தொடங்கியது. எந்தெந்த ஆலயங்களில் திருச்சிலுவை திருப்பண்டம் இருந்ததோ அங்கெல்லாம் திருச்சிலுவை ஆராதனை இடம்பெற்றது. 10ம் நூற்றாண்டுகளில் திருவழிபாடு தவிர்ந்த வேறு சில பக்தி முயற்சிகளும் பரவின. (பாஸ்கா நாடகம், சிலுவையை கல்லறையில் வைத்தல்) எனினும் 1955இல் வழிபாட்டு மறுசீரமைப்பினால் தற்போது உள்ளபடி வழிபாடுகள் அமைந்துள்ளன நள்ளிரவிற்குப் பிறகுதான் திருமுழுக்கு மற்றும் திருவிருந்து கொண்டாட்டத்தில் அழுகை மகிழ்ச்சியாக மாறியது.

சனி : மறுநாள் சனிக்கிழமை இயேசுவின் உடல் கல்லறையில் இருக்க படைவீரர்கள் காவல் காக்கின்றனர்.

**அன்று இரவு நடைபெறும் பாஸ்கா திருவிழிப்பின் முக்கிய கூறுகள் :**
(1) திரு ஒளிவழிபாடு, (2) இறைவார்த்தை வழிபாடு, (3) திருமுழுக்குக் கொண்டாட்டம், (4) திருவிருந்து. திருஒளி வழிபாடு எதற்காக? 4ம் நூற்றாண்டு காலங்களில் ஒவ்வொரு மாலைத் திருப்புகழ்மாலை வழிபாடு திரியை எரியச் செய்யும் சடங்கோடுதான் ஆரம்பமாகும். கிறிஸ்துவே உலகின் உண்மையான ஒளி என்பதை நினைவு கூர்ந்தார்கள். உயிர்ப்பு மெழுகுவர்த்தியானது புதிதாக புனிதப்படுத்தப்பட்ட தீயிலிருந்து ஒளியேற்றப்படுகிறது. இவ்விரவின் மாண்பினை எடுத்துரைப்பது பாஸ்காப் புகழுரை. இந்த இரவில் 9 இறைவார்த்தை முழக்கங்கள் தேவை தானா? திருவிழிப்புக்கெல்லாம் அன்னையாகிய இத்திருவிழிப்பில் முதல் (பழைய) ஏற்பாட்டில் இருந்து ஏழும், இரண்டாம் (புதிய) ஏற்பாட்டில் இருந்து இரண்டுமாக மொத்தம் 9 வாசகங்கள் உண்டு. பொதுநன்மைக்காக தேவையேற்படுமிடத்து குறைக்கலாம். திருவிவிலிய வாசகங்கள் அனைத்தும் மீட்பு வரலாற்றில் உள்ள முக்கிய நிகழ்ச்சிகளை மையப்படுத்துகின்றன.

**ஏன் இந்த நள்ளிரவில் திருமுழுக்கு?** திருச்சபையின் வழிபாட்டு பழக்க வழக்கங்களில், பாஸ்கா ஞாயிறுதான் திருமுழுக்கிற்கு ஏற்ற நேரமாக கருதப்பட்டது. ஏனெனில் இது சாவிலிருந்து வெற்றிகரமாக இயேசு கிறிஸ்து வாழ்வுக்கு வருவதை நினைவுகூருகின்றது.

**உயிர்ப்பு ஞாயிறு :** உயிர்ப்பு ஞாயிறன்று காலை 5 மணிக்கு மீதமுள்ள அடக்கச் சடங்குகளை நிறைவேற்ற பெண்கள் கல்லறைக்குப் போக காலி கல்லறையைப் பார்த்து அதிர்ச்சியடைகின்றனர். மரியாள் அப்போஸ்தலர்களிடம் ஓடிச் சென்று செய்தியைச் சொல்ல பேதுருவும், யோவானும் கல்லறைக்குச் செல்கின்றார்கள். இயேசு தோட்டக்காரனைப் போல மகதலேன் மரியாவுக்கு தோன்றுகின்றார். பிறகு மதியம் 3 மணியளவில் எம்மாவுஸ் செல்லும் வழியில் அப்போஸ்தலர்களிடம் வழிப்போக்கராய் இயேசு தோன்றி 5 மணியளவில் அப்பம் பிட்டபோது அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டு ஜெருசலேமுக்கு விரைந்து சென்று மற்ற அப்போஸ்தலர்களிடம் தெரிவிக்கின்றனர். இரவு 9 மணியளவில் தோமா தவிர மற்ற அப்போஸ்தலர்கள் கூடியிருந்த அறையில் உயிர்த்த இயேசு காட்சியளிக்கின்றார்.

இத்துணை மாண்புமிகு புனித வார நாட்களில் அர்த்தமுடன் பங்கேற்க இச்சிறுமுயற்சி பயன்படும் என நம்புகின்றேன். உயிர்ப்பு தரும் மகிழ்ச்சியில் உயிர்த்த ஆண்டவர் பக்கம் நம்மை திருப்பி புதுவாழ்வும், புதிய ஒளியும் பெற்று உயிர்ப்பின் மக்களாக இயேசுவுக்கு சாட்சி பகர்வோம்.

குத்தப்பட்டது. ஆயுதம் தாங்கிய காவலர் அங்கே காவல் காத்தனர். வரலாற்றில் முதன் முறையாக கல்லறை வாயிலில் காவல் காத்தது இறைமகனாம் இயேசுவுக்கே. இது இன்றுவரை ஒரு அதிசயம். அதோ அந்த அமரவிளக்கு மூன்று நாட்கள் மட்டும் தன் வெளிச்சத்தைப் புதைத்திருந்தது. இருளோ வெளிச்சத்தை புதைக்குழிக்குள் அமிழ்த்துவிட்டோமென இருமாப்பு கொண்டது. எவ்வளவு பெரிய இருட்டானாலும் பழிக்கு அதைக்கிழிக்காமல் விடாது. இதோ, கிழக்கின் விளக்காக கிளர்ந்து விடுகிறார் கிறிஸ்து. விடியலின் வெற்றிக்காய், சாதனையின் சரித்திரமாய் கிளர்ந்து எழுந்தார். உயிர்த்து எழுந்தார், உயிர்த்தேன் உன்னோடு வாழ என்று நமக்கு எடுத்துக்காட்டினார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது இறந்த லாசரை, நயீம் விதவையின் மகனை, யாயீர் மகளை உயிர்த்தெழச் செய்தது போலாகாது. உண்மையில் இம்மூவரும் மீண்டும் இறந்து போயினர். ஆனால் இறைமகன் இயேசுவின் உயிர்த்தெழுதலோ மாறுபட்டது. மறுக்க முடியாதது. அது மனுமகனின் இறப்பற்ற வாழ்வைக் காட்டுகிறது. வெல்ல முடியாதவர் இறைவன் என்றே உறுதியாய் எடுத்துக் காட்டுகிறது.

இயேசு உயிர்த்தார், உயிர்த்த இயேசு மரிய மகதலாவுக்கு, தோமாவுக்கு, பேதுருவுக்கு காட்சித் தந்து நம்பிக்கையை விதைத்தார். தோமா நம்பிக்கையைக் கண்டடைந்தார். பேதுரு மன்னிப்பைக் கண்டடைந்தார். கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் உச்ச உண்மையாக உயிர்ப்பு திகழ்கிறது. மேலும் அவருடைய சிலுவைப் பாடுகளோடு அது பாஸ்கா மறைபொருளின் ஓர் இன்றியமையாப் பகுதியாகத் திகழ்கிறது.

உயிர்ப்பு, அடையாளங்களாலும், சாட்சியங்களாலும் எண்பிக்கப்படக்கூடிய வரலாற்று நிகழ்ச்சியாக உள்ளது. அதே நேரத்தில் மனிதர் என்னும் முறையில் கிறிஸ்து இறைமாட்சியில் நுழைவதை இது குறிக்கிறது. இறந்த கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற சாட்சியத்தில்தான் கிறிஸ்தவம் வாழ்கிறது, உயிர்த்தெழுதலின்றி இந்த கிறிஸ்தவ நம்பிக்கை இறந்துவிடும்.

இந்த உயிர்ப்பு பல பரிமாணங்களைப் பெறும்போது நம்பிக்கைப் பிறக்கிறது. தன்னம்பிக்கை மலர்கின்றது, வறுமையால், வரதட்சணையால் வாழ்வினையே கேள்வியாக்கி உரிமைக்காகப் போராடும் பெண்கள் விதவைகள் வாழ்வு மலர்ச்சி பெற பெண்ணியத்திற்குப் பொருள் கொடுக்கும்போது ஏற்படும் "தாய்மையே உயிர்ப்பாகிறது". எதிர்காலத்தை உருவாக்கும் குழந்தைகள் அநாதைக் குழந்தைகள், தொழிற்சாலைகளில் நடைபிணங்களாகத் திரியும் நிலைக் கண்டு கொதித்து கல்வியறிவு மூலம் அவர்தம் எதிர்கால வாழ்விற்குத் தயாரிக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் ஏற்படும் தன்னம்பிக்கையே உயிர்ப்பாகிறது. முகவரியற்ற வாழ்விழந்த உரிமையற்று வாழும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழிகாட்டி, தன்மான உணர்வு ஊட்டி போராட்டங்களில் பங்கெடுத்து வாழ்வுரிமைக்கு வழிவகுக்கும் "உரிமை உணர்வே" உயிர்ப்பாகிறது.



# உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம்

*திருமதி. ஜோஸ்பின் மேரி*

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ்து இறந்துவிட்டார், அவர் மறைந்துவிட்டார், இயற்கை எய்திவிட்டார், இறைவனை அடைந்துவிட்டார் என வருத்தத்தோடு தெரிவிக்கின்றோம், வழிவழியாய் சொல்லி வருகிறோம். இறந்தவன் மறைந்தான், இனி அவன் மீண்டும் வருவானா? அவன் உயிர்ப்பானா? சாத்தியமா? மனித உயிர்ப்பை என்றும் தத்துவ ஞானிகள் நம்பவில்லை? இது இயற்கைக்கு எதிரானது, அறிவியலுக்கு அப்பாற்பட்டது. அனைவருக்கும் இறப்பு உண்டு, மறுப்பதற்கில்லை. ஆனால் இங்கே உயிர்ப்புண்டு மறுப்பதற்கில்லை. உயிர்த்தெழுதல் ஆன்ம அளவில் மட்டும் அன்று, உடல் சார்ந்த ஒரு மனிதனின் உயிர்ப்பாகும். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு நம் அனைவருக்கும் ஓர் சிறந்த நம்பிக்கை. கிறிஸ்தவம் வாழ்வதற்கான உண்மையின் சாட்சி.


மனிதர்களை மனதில் சுமந்தேன்-அதனால் மரணம் வலிக்கவில்லை. இயேசுதாமே சொல்வார். கறைபடிந்த இதயங்களுக்காய் வானத்திற்கும் பூமிக்குமிடையே தொங்கி, தனது ஆவியை தந்தையின் கையில் ஒப்படைத்தார் என்று. வரலாறு படைக்க வந்தவரின் வரவும், பிரிவும் இரவில்தான். குடிலில் ஆரம்பித்த பயணம் குகையில் முடிந்தது. குகையின் கல்லறை வாயிலில் பெரிய கல்லொன்று வைக்கப்பட்டது. மூடிய பின்னரே அரசு முத்திரையும்

எதிர்காலமே சூனியமாக சிதறடிக்கப்பட்டு யாவராலும் அருவருக்கப்பட்டு ஒதுக்கப்படும் தொழுநோயாளிகள், கேன்சர் நோயாளிகள் வாழ்வில் அக்கறைக்கொண்டு பணியின் வழி அவர்தம் மனிதத்தோடு ஒன்றிணைக்கும் "அன்புறவே" உயிர்ப்பாகிறது. ங்காங்கு அன்றாட கூலிக்காக அயராது பாடுபடும் அன்றாட கூலிகள் ஒன்றிணைக்கப்படாத தொழிலாளிகளின் வாழ்வு வளம்பெற அவர்களோடு இணைந்து பாடுபடும்போது எழும் "போராட்டக்குரலே" உயிர்ப்பாகிறது.

ஆம். இயேசுவில் வாழும் மக்கள் அனைவரும் "உயிர்ப்பின் மக்கள்" மகிழ்ச்சியின் மக்கள். சோகங்களைத் தங்கள் ஆடைகளாக உடுத்தியிருப்போர் மகிழ்ச்சியை அணியும்போது உயிர்ப்பு தானாக உற்பத்தியாகும். எனவே நம்பிக்கை இழந்தோர் மகிழ்ச்சியை அணியும்போது உயிர்ப்பு தானாக உற்பத்தியாகும். நம்பிக்கை இழந்தோர் வாழ்வில் நம்பிக்கையாக, உறவு இழந்தோர் வாழ்வில் உறவாக, மன்னிக்க முடியாதோர் வாழ்வில் மன்னிப்பாக, துன்புறும் மனிதர்களுக்கு ஆறுதல் கூறும் வார்த்தையாக உணர்வோம்.

உயிர்த்த இயேசு கூறியவைகளை உணர்ந்தவர்களாய் நாம் வாழ்ந்து காட்டுவோம். இன்று சமூகத்தின் சுமைகளாய்ச் சோர்ந்து போனவரை இனம் கண்டு கொள்ளவேண்டும். குடும்பத்தின் சிக்கல்களினாலும், சமூக அவலங்களுக்கு மத்தியில் சீரழிந்துபோன பொருளாதார நெருக்கடியில் சிதைந்து போனவர்களைக் கண்டுணர்பவர்களாக, துன்பத்தில் தோள்கொடுப்பவர்களாக, இருப்பதைப் பகிர்ந்துக் கொள்பவர்களாக, அந்நியனுக்கு ஆறுதல் அளிப்பவர்களாக, ஆதரவற்றவர்களுக்கு அன்பு காட்டுபவர்களாக, பசித்தவர்களுக்கு உணவு அளித்தவர்களாக, மனம் உடைந்தவர்களுக்கு வலிமைச் சேர்ப்பவர்களாக கிறிஸ்தவ வாழ்வில் உயரவேண்டும். உயிர்ப்பு சக்தியைப் பெற்று நம்மில் புதைந்துள்ள மனித நேயத்திற்கெதிரான அவலங்களை அகற்றி நாம் உயிர்ப்போம், மகிழ்வுடன் அல்லேலூயா பாடுவோம்.





புனித மாற்கு நற்செய்தியில்

# இயேசுவின் சுவடுகள்

*திரு. பி. விக்டர்*

மாற்கு நற்செய்தியை நமக்கு வழங்கியவர் புனித பவுலின் உதவியாளராக இருந்து பணிசெய்த "மாற்கு" என்பவர் ஆவார். இந்நூல் கி.பி. 64க்கும் கி.பி. 70க்கும் இடையில் உள்ள காலத்தில் எழுதப்பட்டு இருக்கலாம் என்பது பல்வேறு விவிலிய அறிஞர்களின் கருத்தாகும். இந்த மாற்கு நற்செய்திதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி பணியை முதன்முதலாக உலகுக்கு அறிவித்தது. கிறிஸ்தவத்தின் தூண்களாய் இருந்த பேதுருவும், பவுலும் உரோமை நகரும் இரத்த சாட்சியாய் மரித்த பிறகு விசுவாசிகளிடையே ஏற்பட்டிருந்த கலகத்திற்கும், நடுக்கத்திற்கும் கொண்ட நம்பிக்கையில் இருந்த சந்தேகத்திற்கும் விளக்கம் சொல்லும் விதமாக மாற்கு இந்நூலை எழுதியுள்ளார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்த மக்கள் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையில் இன்னும் அதிகமாக ஊன்றியிருக்க வேண்டும் என்கிற நோக்கில் இந்நூல் மிகச் சுருக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நற்செய்தி யூதரல்லாத பிற இனத்து மக்களை முன்னிருத்தி அவர்களுக்கென்று எழுதப்பட்டுள்ளது.

இந்நற்செய்தி முழுவதும் "இயேசு கிறிஸ்து கடவுளின் மகன் என்கிற கருத்தும், நம் அனைவரின் மீட்புக்காகத் துன்புறும் மானிட மகன்" என்கிற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். அதனால்தான் இயேசுவின்

போதனைகளைவிட அவரது அருஞ்செயல்கள் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. மற்ற நற்செய்தியாளர்கள் கூறாத ஒரு சில கருத்துக்களை மாற்கு நற்செய்தியாளர் தமது நூலில் கூறுவதிலிருந்து இயேசுவின் தனிப்பட்ட இயல்புகளை அறிய முடிகிறது. இயேசு தனது பணி வாழ்வின் துவக்கத்தில் 40 நாட்கள் உபவாசம் இருந்து செபித்தார். அவ்வேளையில் அலகையினால் சோதிக்கப்பட்டார், அவர் உபவாசம் இருந்ததோ ஒரு பாலைநிலம், அங்கு அவர் காட்டு விலங்குகளோடு இருந்தார் என்று மாற்கு நற்செய்தியில் வாசிக்கின்றோம். இது மாற்கு நற்செய்தியாளர் இயேசுவைக் குறித்து கூறியுள்ள ஒரு சிறப்புத் தகவலாகும் (மாற்கு 1:13). ஒத்தமை நற்செய்தியான மத்தேயு நற்செய்தியிலும், லூக்கா நற்செய்தியிலும் இத்தகவல் காணப்படாதது ஆச்சரியமாக உள்ளது.

அதுபோல இயேசு தனது 12 திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு அவர்களில் யாக்கோபுக்கும், அவரது சகோதரர் யோவானுக்கும் "இடியைப் போன்றவர்கள்" என்று பொருள்படும் "பொவனேர்கேசு" என்கிற சிறப்புப் பெயரைச் சூட்டினார் (மாற்கு 3:17). இதன் மூலம் இயேசு இவ்விருவரிடம் கொண்டிருந்த அதிகப்படியான அன்பை உணர முடிகிறது. இதுவும் மற்ற நற்செய்தியில் காணப்படவில்லை. அடுத்து இன்னுமொரு சம்பவம், இயேசு குழந்தைகளைத் தொட்டு ஆசி வழங்க வேண்டும் என்று ஒருசிலர் தங்கள் குழந்தைகளை இயேசுவிடம் கூட்டி வந்தனர். இதைக் கண்ட சீடர்கள் அவர்களை அதட்டினர். இயேசு சற்றே ஓய்வு எடுக்கட்டும் என்கிற எண்ணத்தில் அவர்கள் அதட்டினர். இயேசு தனது சீடர்கள்மீது கோபம் கொண்டு "சிறுபிள்ளைகளைத் தடுக்காதீர்கள், ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" (மாற்கு 10:14) என்று கூறி தனக்கு ஓய்வைவிட மக்களுக்கு ஆசி வழங்குவது பிடித்தமான செயல் என்பதை விளக்குகின்றார். "சீடர்கள்மீது இயேசு கோபம் கொண்டார்" என்கிற வார்த்தைகள் மற்ற நற்செய்தியில் காணப்படவில்லை.

அதுபோலவே இயேசுவின் இன்னுமொரு செயல் சீடர்களை திகைக்க வைத்தது. ஆம், இயேசு தனது வாழ்வின் இறுதிப் பயணமாக எருசலேம் நகர் நோக்கி செல்கிறார். ஏற்கனவே எருசலேம் நகரில் எதிர்ப்புகள் இருந்ததால் அங்கு செல்ல வேண்டாம் என்கிற எண்ணத்தில் சீடர்கள் இருந்தனர். ஆனால் இயேசுவோ தனது வாழ்வின் இறுதியை உணர்ந்தவராய், தந்தையின் திருவுளம் நிறைவேற்றத் துடித்தவராய், எதைக் குறித்தும் கவலையில்லாதவராய் தனது பயணத்தைத் தொடர்ந்தார். இதுதான் சீடர்களை திகைக்க வைத்தது (மாற்கு 10:32). மற்ற நற்செய்தியாளர்கள் கூறாத இயேசுவின் தனிப்பட்ட இயல்புகளைக் கூறுவதால் மாற்கு நற்செய்தியாளர் வித்தியாசப்பட்டு நிற்கிறார்.

இதுமட்டுமல்ல, இயேசு தனது வாழ்வில் வெளிப்படுத்திய மனிதாபிமான உணர்வுகளை மாற்கு நற்செய்தியாளர் மட்டும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார். சூம்பிய கையுடையவனை ஓய்வு நாளன்று ஒரு வார்த்தையால் குணப்படுத்திய நிகழ்வின்பொழுது ஓய்வு நாளில் செய்ததை மக்கள்

ஏற்காததால் "இயேசு சினத்துடன்" அவர்களைச் சுற்றிலும் திரும்பி பார்த்தார் என்று இயேசுவின் கோப உணர்வை நற்செய்தியாளர் வெளிப்படுத்தியுள்ளார் (மாற்கு 3:5). மாற்கு நற்செய்தியாளர் இயேசுவை எந்தளவுக்கு அறிந்து, அனுபவித்து, பின்பற்றினார் என்பதை மேற்கூறிய நிகழ்வில் நாம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

மாற்கு நற்செய்தி முழுவதையும் நாம் நோக்கும்பொழுது இயேசு கடவுளுக்கும் மனிதருக்கும் ஓய்வறியா பணியாளராய் வாழ்ந்து காட்டினார் என்பதை அறிந்துக்கொள்ளலாம். அவர் தனித்து செபிக்கும் நேரங்களில் கூட தொடர்ந்து செபிக்க முடியாதபடி பணிசெய்ய அழைக்கப்படுகிறார். விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையான இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டு இருந்தார். சீமோனும், அவரோடு இருந்தவர்களும் அவரைத் தேடிச் சென்று, "எல்லாரும் உம்மைத் தேடிக்கொண்டு இருக்கின்றனர்" என்று கூறி அவரை அழைத்து வருகின்றனர் (மாற்கு 3: 35-37). மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தபடியால் உணவு உண்பதற்குக் கூட இயேசுவுக்கு நேரம் கிடைக்கவில்லை (மாற்கு 3:20). இப்படி எப்பொழுதும் ஓடியாடி ஓய்வு நேரமின்றி பணி செய்ததினால் இயேசுவின் உறவினர்கள் "இவன் மதிமயங்கித் திரிகிறான்" என்று பேசத்தொடங்கினர் (மாற்கு 3:25). வேறு ஒரு சமயம், இயேசுவும் சீடர்களும் ஓய்வு எடுப்பதற்காக பாலை நிலத்திலுள்ள தனிமையான ஒரு இடத்திற்குச் சென்றனர்.

அவர்கள் படகேறி தனிமையான இடத்திற்குச் சென்றதைப் பார்த்த மக்கள் கூட்டம் இயேசுக்கு முன்னே அங்கு கூடிவிட்டனர். தனது ஓய்வு பறிபோனாலும் ஆயனில்லாத ஆடுகளைப்போல இருந்த அவர்கள்மீது இயேசு பரிவு கொண்டு அவர்களுக்கு பலவற்றைக் கற்பித்தார். ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களைக் கொண்டு ஆண்கள் மட்டுமே 5000 பேர் கொண்ட பெருங்கூட்டத்திற்கு உணவளித்து அருஞ்செயல் செய்தார் (மாற்கு 6: 31-34).

இயேசுவின் வார்த்தைகளை விவரிப்பதைப் பார்க்கிலும் இயேசு செய்த மகத்தான செயல்களை விவரிப்பதையே மாற்கு நற்செய்தியாளர் மிகுந்த கவனத்தைச் செலுத்தியுள்ளார். அவரது மகத்தான வல்லமை மிகுந்த செயல்கள் அவர் கடவுளின் மகன் என்பதை பறை சாற்றுவதாக அமைந்துள்ளது. ஒருமுறை இயேசு சீடர்களும் படகில் பயணமாயினர். இயேசு படகின் பின்பகுதியில் தலையணை வைத்து அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தார். அவ்வேளை ஒரு பெரும் புயல் அடித்தது. பயத்தின் மிகுதியால் சீடர்கள் பெருங்கூச்சலோடு இயேசுவை எழுப்புகின்றனர். இயேசு விழித்தெழுந்து கடலை நோக்கி, "இரையாதே அமைதியாயிரு" என்றார். உடனே அமைதி உண்டாயிற்று. இதைக்கண்ட சீடர்கள் ஆச்சரியப்பட்டனர் (மாற்கு 4:35-40). "எப்பத்தா" என்று கூறி ஊமையும் செவிடனையும் சுகப்படுத்தினார் (மாற்கு 7:34). ஆடையைத் தொட்டவர்க்கும் சுகம் கொடுத்தார். 12ஆண்டுகள் இரத்தப்போக்கினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் இயேசுவின் ஆடையைத் தொட்டாலே சுகம் பெறுவேன் என்று கூறி

தொட்டாள். உடனே இரத்தப்போக்கு நின்றது சுகமடைந்தாள் (மாற்கு 5:29). மரித்து பாடையில் போகவிருந்த "யாயீர்" என்கிற தொழுகைக் கூடத் தலைவனின் மகளுக்கு மீண்டும் உயிரளித்து அருஞ்செயல் செய்தார். இவ்வாறாக மாற்கு நற்செய்தியாளர் இயேசு செய்த 19 அருஞ்செயல்களை தன்னுடைய நற்செய்தியில் எழுதிவைத்து இயேசு "வல்லமையுள்ள இறைவனின் மகன்" என்பதை ஐயம் தீர தெளிவுப்படுத்தியுள்ளார்.

இயேசுவின் பாடுகளை விளக்கமாக எழுதி இயேசு நம்மை மீட்பதற்காக வந்த மானிட மகன் என்பதையும் நிலைநாட்டியுள்ளார். இவ்வாறாக இயேசுவின் இறைத் தன்மையையும், மனிதத்தன்மையையும் அழகான உதாரணங்களால் உணர்த்தி இயேசுவை எல்லோரும் நம்ப வேண்டும், நம்பி அவரை நம் வாழ்வின் மீட்பராக ஏற்கவேண்டும் என்பதை மாற்கு நற்செய்தியாளர் எடுத்துரைக்கின்றார். இயேசுவே மெய்யான கடவுளின் மகன் இயேசுவே நம்மை மீட்க வந்த மானிட மகன் என்பதை ஏற்போம், இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வோம்.





## விடுமுறை விவிலியப் பள்ளி (VBS):
# சில ஆலோசனைகள்

*திரு. விக்டர்*

நமது கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் "திருவிவிலியம்" திருவிவிலியத்தைத் தவிர, வேறொரு அடித்தளத்தை யாரும் போட இயலாது என்று புனித பவுல் கூறுகிறார். (கலா 1:8) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனை, அவரது சீடர்களின் போதனையாகிய பாறையில் அடித்தளம் அமைத்து நமது விசுவாச கட்டிடம் எழுப்பப்பட வேண்டும். (எபே 2:20) காற்று வீசலாம், புயல் மழை வரலாம், பெருவெள்ளம் வரலாம் ஆனால் அது அசைவுறாது (மத் 7:25) இப்படி ஒரு வலிமையான விசுவாச அடித்தளத்தை அமைத்துத் தருவதுதான் "விடுமுறை விவிலிய பள்ளி" ஆகும்.

இன்று நான் உனக்குக் கட்டளையிடும் வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல் (இச 6:6,7) இப்பணியை விடுமுறை விவிலிய பள்ளி VBS சிறப்பாக செய்கிறது. ஆடல், பாடல், கதைகள், விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள் மூலம் திருவிவிலியத்தைக் கற்பதால், இறையாட்சியின் உண்மைகளும், மதிப்பீடுகளும் சிறார்களின் மனதில் எளிதில் பதியவைக்க முடிகிறது. கலைவழியில் இறைவனை அறிந்துக்கொள்ளும் இடமாக விடுமுறை விவிலிய பள்ளி VBS செயல்படுகிறது. இறையரசை நோக்கிய ஆன்மீக பயணத்திற்கு இது பெரிதும் உதவி செய்கிறதாக இருக்கிறது.

**VBS நடத்துவதற்கு அடிப்படை தேவைகள் :** முதல் தேவை - இடம்: நமது பங்குகளில் உள்ள பள்ளியிலோ, சமூகக் கூடமோ, ஆலயத்திலோ அல்லது மரத்தடியிலோ எங்கு வேண்டுமானாலும் நடத்தலாம்.

இரண்டாம் தேவை - மாணவர்கள்: VBSல் பயிலும் மாணவ மாணவியரின் பெயர்களை முன்னதாகவே வகுப்பு வாரியாக கணக்கு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அன்பிய பொருப்பாளர்கள் மூலம் இதை எளிதில் செய்துவிட முடியும். கத்தோலிக்கர் மட்டுமல்லாது மற்ற சபையாரும், மாற்று மதத்தினரும் இப்பள்ளியில் பயிலலாம்.

மூன்றாவது தேவை - ஆசிரியர்கள்: திரு விவிலியத்தின்மீது ஆர்வமுள்ள யாவரும் VBS ஆசிரியராய் இருப்பதற்கு தகுதியானவர்களே. ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், படித்து முடித்த அல்லது படித்துக்கொண்டிருக்கும் இளைஞர்/இளம் பெண்கள், பக்த சபையினர், குடும்பப் பெண்கள் இப்படி யார் வேண்டுமானாலும் VBS ஆசிரியராக பணியாற்றலாம். ஒரு VBS பள்ளிக்கு குறைந்தபட்சம் 5 ஆசிரியர்கள் இருப்பது அவசியம். நான்கு வகுப்புகளுக்கு 4 ஆசிரியர்கள், ஆடல், பாடல், விளையாட்டு இவற்றை கற்றுக் கொடுக்க ஒரு ஆசிரியர் என குறைந்தபட்சம் 5 பேர் இருப்பது அவசியம்.

VBS பள்ளியின் ஆசிரியர்கள் திருவிவிலியத்தைப் பற்றிய தெளிவு குறைந்த பட்சமாவது தெரிந்திருக்க வேண்டும். மேலும் அதை கற்றுக் கொடுக்கும் ஆர்வமுடையவராக இருப்பது அவசியம். VBS பள்ளியின் ஆசிரியர்கள் "திருவிவிலியத்தை" தினந்தோறும் வாசித்து, தியானித்து செபிக்கிறவர்களாக இருப்பது நல்லது. இறையனுபவம் இல்லாமல் இறைவார்த்தையை தகுந்த விதத்தில் கற்றுக் கொடுக்க முடியாது. ஏனெனில் உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும் (மத் 12: 34) என்று இயேசு கூறியுள்ளார். மேலே கூறப்பட்ட குறைந்தபட்ச தகுதிகளோடு ஏடீளு ஆசிரியர்கள் அமைவார்கள் என்றால் அந்த VBS சிறப்பாக இயங்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

VBS வகுப்பு: ஒரு VBS பள்ளியை நான்கு குழுக்களாக பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| முதல் குழு: | ஆர்வ நிலை | UKG முதல் 1, 2 வகுப்புகள் |
| இரண்டாம் குழு: | தொடக்க நிலை | 3,4,5 வகுப்புகள் |
| மூன்றாம் குழு: | இயலா நிலை | 6,7,8 வகுப்புகள் |
| நான்காம் குழு: | முது நிலை | 9,10,11 வகுப்புகள் |

இந்த குழுக்களின் நிலைகளுக்கேற்ப பாடத்திட்டங்களும், பயிற்சி ஏடுகளும் ஆசிரிய கையேடுகளும் மறைமாவட்ட அளவில் தயாரித்து வழங்கப்படுகிறது.

**VBS பள்ளியின் கால அட்டவணை:** வழக்கமாக VBS பள்ளி 10 நாட்களுக்கு நடக்கும். "மே" மாதம் முதல் தேதி முதல் "மே" மாதம் பத்தாம் தேதிவரை நடக்கும்.

**ஒரு நாளுக்கான கால அட்டவணை:**

| | | |
|---|---|---|
| காலை: | 9.00 | ஆசிரியர் செபம் செய்தல் |
| | 9.15 | பொதுவான பாடல் பயிற்சி |

| | |
|---|---|
| 9.45 | மாணவர், கூடி செபித்தல், ஒன்றுக்கூடல் நடத்துதல் |
| 10.00 | குழு பாடவேளை |
| 10.45 | தேநீர் இடைவேளை, ஏதாகிலும் சிற்றுண்டி தருவது சிறப்பாக இருக்கும் |
| 11.00 | குழு பாடவேளை, இதில் மாணவர் பயிற்சி புத்தகம் எழுதுதல், வண்ணம் தீட்டுதல், மற்றும் பல |
| 11.45 | குழுக்களின் விளையாட்டு பொதுவாக குழுக்களாக விளையாடும் விளையாட்டை தேர்வு செய்யவும் |
| மதியம்: 12.15 | பாடல் பயிற்சி அனைவருக்கும் |
| 12.30 | தொடர்கதை, நிறைவு செபம், ஆசிரியர் திறனாய்வும் திட்டமிடுதலும் |

வகுப்புகளில் ஆடல், பாடல், விளையாட்டு, வண்ணம் தீட்டுதல், மனப்பாடம் ஒப்புவித்தல், நாடகம் என அனைத்து சாதனங்களையும் பயன்படுத்தி பிள்ளைகளின் உற்சாகத்திற்கு குறைவில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு (VBS) வகுப்புக்கு வந்த பிள்ளைகள் அடுத்த நாளும் வரவேண்டும் என்கிற ஆர்வத்தை ஊட்டுகிற இடமாக வகுப்புகள் மாற வேண்டும்.

ஆடல், பாடல், விளையாட்டு, நாடகம் எதுவாயிருந்தாலும் (VBS) பள்ளியில் நடப்பதில் அது "திருவிவிலியம்" சார்ந்ததாகவே இருக்க வேண்டும். தனி ஒருவனுடைய திறமைக்கு முக்கியத்துவம் தராமல் குழு விளையாட்டுக்கும், குழு நடனத்திற்கும், குழு நாடகங்களுக்குமே முக்கியத்துவம் தரவேண்டும். அப்பொழுதுதான் மாணவ மாணவியர் சமூகம் சார்ந்த சிந்தனையுடையவராக, பிறரையும் மதிக்கிற, ஏற்றுக்கொள்கிற மனப்பான்மையுடையவராக வாழ பழகுவர். இதற்கென்று ஒரு ஆசிரியர் குழுவை ஏற்படுத்தி திருவிவிலியம் சார்ந்த விளையாட்டு, பாடல், ஆடல், நடனம் இவற்றைத் திட்டமிட்டு தயாரித்து வைத்துக் கொள்வது நல்லது. அது மிகமிகஅவசியம். வகுப்பு பாடங்களை நிழல் படங்கள் மூலம் கதை சொல்லாமல் அட்டைகளில் வரைந்து வைத்து கதையை விளக்கி பாடம் நடத்தலாம். குச்சி மனித உருவங்களை கரும்பலகையில் வரைந்தும் கதை சொல்லலாம். பாடத்திற்கேற்ற பாடல்களைப் பாடி பிள்ளைகளை நடிக்கச் செய்தும் பாடம் நடத்தலாம். விவிலியச் சம்பவங்களை அல்லது உவமைகளை நடித்துக் காட்டச் செய்து பாடம் நடத்தலாம்.

நிறைவு நாளன்று ஒரு கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து பங்கு அளவில் எல்லோருக்கும் அறிவித்து விழா நடத்தலாம். இது மாணவருக்கு உற்சாகத்தையும் பெற்றோருக்கு மனமகிழ்ச்சியையும் தரும். VBS நடக்கும் 10 நாட்களில் ஒரு நாள் இன்பச் சுற்றுலா அழைத்துச் செல்வது சிறப்பாகும்.

மேலே கூறப்பட்ட யாவும் VBS சிறப்பாக நடக்க ஒரு சில ஆலோசனைகள் மட்டுமே. இவற்றோடு தங்களது கற்பனைகளையும், திறமைகளையும் இணைத்து VBS நடத்தும்போது அது மிகச் சிறப்பானதாக அமையும் என்பதில் ஐயமில்லை. செபிப்போம், ஒன்றிணைவோம், உழைப்போம், உயர்வோம் வாரீர்...



# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

### மத்திய கிழக்கில் அமைதி நிலவ இந்திய ஆயர் பேரவை சிறப்பு இறைவேண்டல்

மத்திய கிழக்கில் பதற்றமும் வன்முறையும் அதிகரித்து வரும் இக்காலக்கட்டத்தில், அமைதிக்காக ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்யவும், மன்றாடவும் இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த கத்தோலிக்கத் தலத்திருஅவையினருக்கும் அழைப்பு விடுத்துள்ள ஆயர்கள், "போரினாலும் நிலையற்ற சூழலினாலும் ஏற்படும் துயரங்கள் ஒட்டுமொத்த மனித குலத்தையுமே பாதிக்கின்றன," என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக, மத்திய கிழக்கில் பல இந்தியர்கள் வாழ்ந்து வருவதை எடுத்துக்காட்டியுள்ள கர்தினால் பெராவ் அவர்கள், "தொலைவில் இருந்தபடியே தங்கள் குடும்பங்களை ஆதரிப்பதோடு, திருஅவையின் வாழ்விற்கும் நமது நாட்டின் வளர்ச்சிக்கும் அவர்கள் தாராளமாகப் பங்களிக்கிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் "நிச்சயமற்ற இந்தச் சூழலில், அவர்களை நாம் இறைவனின் பாதுகாப்பில் சிறப்பாக ஒப்படைத்து, அவர்களின் பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் அமைதிக்காக இறைவேண்டல் செய்வோம்" என்று கூறியுள்ளார் கர்தினால் பெராவ்.

### திருஅவையின் உதவியை வேண்டும் லெபனோன் அமைச்சர்

இஸ்ரேலிய எல்லைக்கு அருகே மீண்டும் ஏற்பட்டுள்ள மோதல்களுக்கு மத்தியில், தெற்கு லெபனோனில் கிறிஸ்தவர்களின் இருப்பைப் பாதுகாப்பதில்

உதவி கோரி, அதன் வெளியுறவுத்துறை அமைச்சர் யூசுப் ராகி அவர்கள் திருப்பீடத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார். மோதல்களைக் குறைப்பதற்கும் பதற்றத்தைத் தணிப்பதற்கும் திருப்பீடம் எடுத்து வரும் தொடர்ச்சியான முயற்சிகளைப் உறுதிப்படுத்திய பேராயர் காலகர் அவர்கள், லெபனோன் நாட்டு மக்களுக்காக இறைவேண்டல் செய்வதாக உறுதியளித்து தனது ஒன்றிப்பையும் வெளிப்படுத்தியுள்ளார். மத்திய கிழக்கு நாடுகளில் அதிக எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் வாழும் நாடான லெபனோனின் தனித்துவமான அடையாளத்தைத் தக்கவைக்க அங்கிருக்கும் கிறிஸ்தவர்கள் பெரும் முயற்சி எடுத்து வருகின்றனர். இருப்பினும், தற்போதைய சூழலில் அந்நாட்டின் எதிர்காலம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

## திருஅவையின் வாழ்விற்கு சிறார்களைப் பாதுகாப்பது மிகவும் அவசியம்

சிறார் பாதுகாப்புக்கான பாப்பிறை ஆணையத்தின் ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்தின் உறுப்பினர்களிடையே ஆற்றிய உரையில், திருஅவையில் பாலியல் முறைகேடுகளால் பாதிப்பிற்குள்ளாகும் குழந்தைகளைப் பாதுகாப்பதன் அவசியத் தேவைக் குறித்து எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ. பேராயர் திபால்ட் வெர்னி மற்றும் ஆயர் லூயிஸ் மனுவேல் அலி ஹெர்ரெரா இருவரின் தலைமையில் இயங்கிவரும் இந்த ஆணைக்குழுவின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பாராட்டிய திருத்தந்தை, திருஅவைக்குள் ஒரு "பராமரிப்புப் பண்பாட்டின்" முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.சிரார் மீதான பாலியல் முறைகேட்டினைத் தடுப்பதில் திருஅவையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்திய திருத்தந்தை, "இந்தப் பணி அதன் நோக்கத்திற்கு இன்றியமையாதது" என்றும் குறிப்பிட்டுக் காட்டினார். மேலும் பல்துறை அணுகுமுறையின் முக்கியத்துவம் (multi-disciplinary approach) குறித்து எடுத்துரைத்த திருத்தந்தை, குறிப்பாக, பாதிப்புக்குள்ளாகும் தன்மை குறித்த மாறிவரும் கருத்துக்கள் மற்றும் பாலியல் முறைகேடுகள் தடுப்பில் தொழில்நுட்பம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது தொடர்பான ஆணையத்தின் எதிர்கால அறிக்கைகள் மீது நம்பிக்கை தெரிவித்தார். கூட்டுப் பொறுப்புடன் செயலாற்ற அழைப்பு விடுத்த திருத்தந்தை, "வலுக்குறைந்தோரைப் பாதுகாப்பது திருஅவை வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் ஊடுருவியிருக்க வேண்டும்" என்று அவர்கள் அனைவருக்கும் நினைவூட்டினார். இறுதியாக, அப்பணிக்குழுவின் பணியைத் திருஅவையின் அன்னையாம் புனித மரியாவின் பரிந்துரை இறைவேண்டலில் ஒப்படைத்த திருத்தந்தை, அவர்கள் அனைவருக்கும் தனது அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கி தனது உரையை நிறைவு செய்தார்.

## "அன்பின் மகிழ்ச்சி" திருத்தூது அறிவுரை மடலின் 10-வது ஆண்டு நிறைவு

முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய "அன்பின் மகிழ்ச்சி" என்ற திருத்தூது அறிவுரை மடலின் 10-வது ஆண்டு நிறைவு விழாவுக்காக

அனுப்பியுள்ள செய்தியொன்றில் கத்தோலிக்கத் திருஅவைக்குள் குடும்ப வாழ்க்கை, மேய்ப்புப்பணி பொறுப்பு மற்றும் ஒன்றிணைந்த பயண உரையாடல் ஆகியவற்றில் புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்புக்கான அழைப்பொன்றையும் விடுத்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ. "வேகமாக மாறிக்கொண்டு வரும் நமது காலத்தில், திருஅவை நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளவும் அதன்படி வாழவும் உதவும் பொறுப்பை ஆண்டவர் ஒப்படைத்துள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிப்பது மிகவும் முக்கியமானது" என்று கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய "அன்பின் மகிழ்ச்சி" (Amoris Laetitia) என்ற திருத்தூது அறிவுரை மடலின் 10-வது ஆண்டு நிறைவு விழாவுக்காக வழங்கியுள்ள செய்தியொன்றில் இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை, "இம்மடல் இன்றும் நாம் தொடர்ந்து ஆராய வேண்டிய மதிப்புமிக்க படிப்பினைகளை வழங்குகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

## மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்க திருப்பீடம் அறைகூவல்

"உலகிலேயே கிறிஸ்தவர்கள்தான் அதிக அளவில் துன்புறுத்தப்படும் மதச் சமூகமாக உள்ளனர் என்றும், வன்முறை, பாகுபாடு மற்றும் அடக்குமுறையினால் ஏறத்தாழ 40 கோடி கிறிஸ்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் இருக்கும் ஐ.நா. அமைப்புக்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கான திருப்பீட பிரதிநிதி பேராயர் எத்தோரே பலஸ்த்ரேரோ அவர்கள் தெரிவித்துள்ளார். "துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுடன் ஒன்றிணைவோம்" என்ற நிகழ்வில் உரையாற்றிய பேராயர் பலஸ்த்ரேரோ அவர்கள், கடந்த 2025-ஆம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 5,000 கிறிஸ்தவர்கள் தங்களது விசுவாசத்திற்காகக் கொல்லப்பட்டனர் என்றும், இது ஒரு நாளைக்குச் சராசரியாக 13 பேர் என்ற அளவில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், "மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும், தாக்குதல்களைத் தடுப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வதும் அரசுகளின் அடிப்படைப் பொறுப்பு" என்று வலியுறுத்தியுள்ளார் பேராயர் பலஸ்த்ரேரோ. "துன்புறுத்தல் என்பது வன்முறையாக மட்டும் இருப்பதில்லை, மாறாக அது நுட்பமான முறைகளிலும் நடக்கிறது" என்று குறிப்பிட்டுள்ள பேராயர் அவர்கள், "இதில் சமூகப் புறக்கணிப்பு, சட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் பாகுபாடு ஆகியவை அடங்கும்" என்றும், "மேற்கத்திய நாடுகளில்கூட இத்தகைய நிலைகள் காணப்படுகின்றன" என்றும் எடுத்துக்காட்டியுள்ளார். கடந்த 2024-ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் மட்டும், கிறிஸ்தவர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட 2,200-க்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய துன்புறுத்தல்கள் ஆன்மிக மற்றும் சமூகப் பிணைப்புகள் இரண்டையுமே சீர்குலைக்கின்றன என்று அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். "மத சுதந்திரத்தை ஒரு அடிப்படை மனித உரிமையாக நாடுகள் நிலைநிறுத்த வேண்டும்" என்றும், "அதை மீறுபவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலையை ஒழிக்க வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்துள்ளார் பேராயர் பலஸ்த்ரேரோ.

# சுடர் வாசகர் போட்டி 132

## சரியான விடைகள்

1. இறையியல் அறிஞர்களின் ஒப்புதல்.
2. புனித பேதுரு
3. புனித கசிமீர்
4. "கன்னி மரியா கருவுற்றிருப்பதற்குத் தூய ஆவியே காரணம்"
5. இறைவாக்கினர் எசாயா
6. நாம் செவிமடுத்து கேட்கத் தெரிந்தால், கடவுளின் வார்த்தையை மனமுவந்து ஏற்றுக்கொண்டால், நம் வாழ்க்கை மாறும்.
7. திசியானோ ஒனெஸ்தி
8. பன்னிரண்டாம் வயதில
9. வெண்ணிற ஆடை அணிந்து கையில் குருத்தோலைகளைப் பிடித்திருந்தார்கள்.
10. புனித பிரிஜித், புனித கொலும்பா
11. "கடவுளுடைய வார்த்தைக்கு நம் இதயங்களைத் திறக்கும்போது மனமாற்றம் தொடங்குகிறது"
12. உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே...
13. (மத்தேயு 4:4)
14. கர்தினால் பரோலின் அவர்கள்
15. துறவற வார்த்தைப்பாடில்லா துறவற அமைப்பு



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Santhosa Mary, Coimbatore
Mr. Lourdusamy, Bangalore
Ms. Edwin Mary, Villupuram

# சுடர்

## வாசகர் போட்டி 133



1) பாஸ்கா முப்பெரும் நாட்கள் என்பன எவை?
2) புனித வார வழிபாட்டின் 3 முக்கிய நிகழ்வுகள் யாவை?
3) நாம் புத்துயிர் பெற முன்னோடியாக அமைவது எது?
4) கடவுளின் வார்த்தைகளை கூறிக் கொண்டே இரத்த சாட்சியாக இறந்தவர் யார்?
5) இறையிரக்க ஞாயிறு எப்போது கொண்டாடப்படுகிறது?
6) இறைவார்த்தையில் கடவுளை உணர்ந்தவர்கள்,அப்பம் பிடுதலில் கடவுளை முழுமையாக யாரைக் கணடுணர்ந்தனர்?
7) இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தை சிந்தி திருஅவைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். அந்த சுதந்திரத்தை அவர் மிகமிக நேசிக்கிறார்" என்று அடிக்கடி சொன்னவர் இவர்?
8) இந்தியாவில் கேரளாவில் உள்ள எடப்பள்ளியில் உள்ள பிரபல திருத்தலத்தின் பெயர் என்ன?

9. "ஏழைகளின் வக்கீல்" என்று அழைக்கப்பட்டவர் யார்?
10. எகிப்தின் அலெக்சாந்திரியா நகர் திருஅவையை நிறுவியவர் யார்?
11. மரியன்னை பக்திக்கு காரணமானவர் என புகழாரம் சூட்டப்பட்டவர் யார்?
12. அன்னைமரி இறையேசு மற்றும் வான் வீட்டாரையும் இரண்டு முறை காட்சி கண்டு வார்த்தையை கேட்டு காயங்களை ஏற்றவர் யார்?
13. புனிதவார புதன் அன்று பெத்தானியாவில் தங்கி தனது பாடுகளுக்காக தன்னையே தயாரித்தவர் யார்?
14. இயேசுவில் வாழும் மக்களை யாருடைய மக்களாக அழைக்கப்பட்டனர்?
15. முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய "அன்பின் மகிழ்ச்சி" என்ற திருத்தூது அறிவுரை மடல் வெளிவந்து எத்தனை ஆண்டுகள் நிறைவடைகிறது?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

தொழிலாளர் புனித யோசேப்பு

புனித அத்தனாசியுஸ்

பாஸ்கா காலத்தின் 5ம் ஞாயிறு

பாஸ்கா காலத்தின் 6ம் ஞாயிறு

புனித மரிய மசரெல்லோ

புனித மத்தியா திருத்தூதர் விழா

புனித இசிதோர்

ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா

புனித லெயனார்து முரியால்தோ

புனித முதலாம் யோவான்

பெந்தக்கோஸ்து பெருவிழா

திருஅவையின் தாய் அன்னை மரியா

புனித பிலிப்பு நேரி

அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி

தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

புனித மரிய தோமினிக்கா மசரெல்லோவின் வாழ்க்கை வரலாறு

கிறிஸ்தவர்களின் சகாய அன்னை நமக்குத் தரும் செய்தி

விடுமுறை விவிலியப் பள்ளி - ஒரு கண்ணோட்டம

திருஅவையின் செய்திகள

# ஏப்ரல் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | பு | | எசா. 50: 4-9 | மத். 26: 14-25 |
| 02 | வி | புனித வியாழன் | I. விப. 12: 1-8, 11-14<br>II. 1கொரி. 11: 23-26 | யோவா. 13: 1-15 |
| 03 | வெ | புனித வெள்ளி (ஆண்டவரின் திருப்பாடுகள்) | I. எசா. 52: 13-53:12<br>II. எபி. 4: 14-16, 5: 7-9 | யோவா. 18: 1-19:42 |
| 04 | ச | புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு | அன்றைய திருப்பலிக்கான வாசகங்களை படிக்கவும். | |
| 05 | ஞா | ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா | I. திப. 10: 34,37-43<br>II. கொலோ. 3: 1-4 | யோவா. 20: 1-9 |
| 06 | தி | | திப. 2: 14,22-33 | மத். 28: 8-15 |
| 07 | செ | | திப. 2: 36-41 | யோவா. 20: 11-18 |
| 08 | பு | | திப. 3: 1-10 | லூக். 24: 13-35 |
| 09 | வி | | திப. 3: 11-26 | லூக். 24: 35-48 |
| 10 | வெ | | திப. 4: 1-12 | யோவா. 21: 1-14 |
| 11 | ச | | திப. 4: 13-21 | மாற்கு 16: 9-15 |
| 12 | ஞா | இறை இரக்கத்தின் ஞாயிறு | I. திப. 2: 42-47<br>II. 1பேதுரு 1: 3-9 | யோவா. 20: 19-31 |
| 13 | தி | | திப. 4: 23-31 | யோவா. 3: 1-8 |
| 14 | செ | | திப. 4: 32-37 | யோவா. 3: 7-15 |
| 15 | பு | | திப. 5: 17-26 | யோவா. 3: 16-21 |
| 16 | வி | | திப. 5: 27-33 | யோவா. 3: 31-36 |
| 17 | வெ | | திப.5: 34-42 | யோவா. 6: 1-15 |
| 18 | ச | | திப. 6: 1-7 | யோவா. 6: 16-21 |
| 19 | ஞா | பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு | I. திப. 2: 14, 22-33<br>II. 1பேதுரு 1: 17-21 | லூக். 24: 13-35 |
| 20 | தி | | திப. 6: 8-15 | யோவா. 6: 22-29 |
| 21 | செ | புனித ஆன்சலம் ஆயர் | திப. 7: 51-8:1 | யோவா. 6: 30-35 |
| 22 | பு | | திப. 8 1-8 | யோவா. 6: 35-40 |
| 23 | வி | புனித ஜார்ஜ், புனித அடால்பெர்ட் | திப. 8: 26-40 | யோவா. 6: 44-51 |
| 24 | வெ | சிக்மரிங்கன் நகர்ப் புனித பிதேலிஸ் | திப. 9: 1-20 | யோவா. 6: 52-59 |
| 25 | ச | புனித மாற்கு நற்செய்தியாளர் விழா | 1பேதுரு 5: 5-14 | மாற்கு 16: 15-20 |
| 26 | ஞா | இறையழைத்தல் ஞாயிறு | I. திப. 2: 14, 36-41<br>II. 1பேதுரு 2: 20-25 | யோவா. 10: 1-10 |
| 27 | தி | | திப. 11: 1-18 | யோவா. 10: 11-18 |
| 28 | செ | புனித பீட்டர் ஷானல் மற்றும் மான்போர்ட் நகர்ப் புனித லூயிஸ் மரிய கிரிஞ்ஞோன் | திப. 11: 1-18 | யோவா. 10: 11-18 |
| 29 | பு | சியென்னா நகர்ப் புனித கத்ரீன் | திப. 12: 24-13:5 | யோவா. 12: 44-50 |
| 30 | தி | புனித ஐந்தாம் பயஸ் | திப. 13: 13-25 | யோவா13: 16-20 |

TO SHARE
THE LIGHT

# தீபகம் மறைப்பணி மையம் வழங்கும்

## அருளடையாளங்களின் மறைக்கல்வி (தமிழ் & English)

AVAILABLE NOW




தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**தீபகம்**

45 லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-10

தொலைப்பேசி : 044 26428162, 9940276203

தீபகச் சுடர் வாசகர்கள், உபகாரிகள் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்

**இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்**



*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**